# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 282 சனி, ஏப்ரல் 13, 2024 15 பக்கங்கள்




## அன்னை பூபதி

அவர்களின் நினைவுகளை நெஞ்சில் சுமந்து...



## பிளவை நோக்கி தமிழரசுக் கட்சி ?

பேராசிரியர் **அமிர்தலிங்கம்** செவ்வி

## துண்டாடப்படும் தமிழர் தாயகமும் தடுப்பதற்கு நாதியற்ற தமிழர்களும்

மட்டு.நகரான்



போராட்டக் காலத்தில் குரலற்ற மக்களின் குரலாக ஒலித்த ஊடகவியலாளர் **பொ.மாணிக்கவாசகம்** அவர்களின் முதலாவது ஆண்டு நினைவேந்தலில் இலக்கின் இதய அஞ்சலியை இலக்குக்கும் அவர் செய்தனவற்றை மீள் நினைந்து நன்றியுடன் தெரிவிக்கின்றோம்.



## ரணிலுக்காக தயாராகும் கூட்டணி! மொட்டுக்குள் அதிகரிக்கும் பிளவு!!

அகிலன்




© 2024 இலக்கு இணையம்

## இலங்கை அதிகாரிகள் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும் - சர்வதேச மன்னிப்புச் சபை



இலங்கையில் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகள், மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை கடந்த புதன்கிழமை(10) வெளியிட்டுள்ள புதிய விசாரணை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையில் "போராட்டங்களின் போது சட்டவிரோத ஆயுதங்களைப் பயன்படுத்துதல்" என்ற அறிக்கை, 2022 மார்ச் மற்றும் 2023 ஜூன் மாதங்களுக்கு இடையில் நடைபெற்ற 30 போராட்டங்களின் போது பலாத்காரத்தைப் பயன்படுத்தியதை பகுப்பாய்வு செய்கிறது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்த ஆய்வு, கண்ணீர்ப் புகை மற்றும் நீர் பீரங்கியை சட்டவிரோதமாகப் பயன்படுத்தியமை, சட்டத்தை அமுல்படுத்தும்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## இஸ்ரேலின் தாக்குதலில் ஹமாஸ் தலைவரின் பிள்ளைகள் பலி



கடந்த புதன்கிழமை(10) காசாவின் மத்திய பகுதியில் பயணம் செய்துகொண்டிருந்த கார் மீது இஸ்ரேலின் வான்படையினர் மேற்கொண்ட குண்டுத்தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் தலைவரான இஸ்மயில் ஹனியாவின் மூன்று புதல்வர்களும் அவர்களுடன் பயணம் செய்த 4 பேரப்பிள்ளைகளும் கொல்லப் பட்டுள்ளனர்.

முஸ்லீம் மக்களின் புனித ரம்ழான் நாள் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக சென்ற சமயமே இந்ததாக்குதல் இடம்பெற்றுள்ளது. அமீர், ஹசீம் மற்றும் மொஹமட் ஆகிய தனது புதல்வர்கள் கொல்லப்பட்டதை இஸ்மாயில் உறுதிப் படுத்தியுள்ளார்.

புனித பண்டிகை காலத்தில் அகதி முகாம்களில் உள்ள தமது உறவினர்களை பார்ப்பதற்காக அவர்கள் சென்றபோதே கொல்லப் பட்டதாகவும், பெருமளவானதனது மக்கள் கொல்லப்பட்டபோது தனது புதல்வர்களின் மரணம் அதனை விட அதிக பெறுமதியானது அல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த போர் ஆரம்பமாகியதில் இருந்து தனது உறவினர்கள் 60 பேரை தான் இழந்துள்ளதாகவும், இந்த இழப்புக்கள் பேச்சுக்களில் தமது நிலையை மாற்றப்போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அவரின் பிள்ளைகள் ஹமாஸ் அமைப்பின் உறுப்பினர்கள் என இஸ்ரேல் தெரிவித்துள்ளபோதும் அவர் அதனை மறுத்துள்ளார்.


## முள்ளிப்பொத்தானையில் நோன்புப் பெருநாள் திடல் தொழுகை



புனித ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் கடந்த புதன்கிழமை(10) இஸ்லாமியர்களால் கொண்டாடப் பட்டது. இதனை முன்னிட்டு நோன்பு பெருநாள் திடல் தொழுகை முள்ளிப்பொத்தானை ஈச்சநகர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதனை முள்ளிப்பொத்தானை புஹாரி ஜூம்மா பள்ளி நிர்வாகத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். குறித்த தொழுகையை உலமா சபையின் தம்பலகாமம் பிரதேச தலைவர் மௌலவி குசைன் மற்றும் மௌலவி முர்சித் ஆகியோர்கள் வழிநடாத்தினர். சகோதரத்துவம் ஒற்றுமை போன்றனஇதன்போது ஒவ்வொருவருக்குமிடையில் கைலாகு கொடுத்து முசாபகா செய்வதன் மூலம் வெளிப்படுத்தப்பட்ட. இதில் நூற்றுக்கணக்கான பெண்கள் ஆண்கள் என பலரும் கலந்து கொண்டு தொழுகையை நிறைவேற்றினார்கள்.

## உக்ரைனில் மிகமுக்கிய எரிசக்தி நிலையம் தாக்கியழிப்பு



கடந்த வியாழக்கிழமை(11) ரஸ்யாவின் வான்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் இஸ்ரேலின் மிக முக்கிய எரிசக்தி நிலையம் முற்றாக தாக்கி அழிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரைனில் உள்ள எரிசக்தி நிலையங்களில் ரைபில்யா பகுதியில் இருந்த நிலையமே மிகவும் பெரியது. அது தலைநகர் கிவ் உட்பட 3 பிராந்தியங்களுக்கான மின்சக்தியை வழங்கும் நிலையமாகும்.

அங்கு ஏற்பட்ட சேதம் மிகவும் பாரதூரமானது அந்த நிலையம் 100 விகித அழிவைச் சந்தித்துள்ளது

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## தென்கொரிய தேர்தலில் எதிர்க்கட்சி அமோக வெற்றி

தென்கொரியாவில் இடம்பெற்ற நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் எதிர்க்கட்சிகளின் கூட்டணியான கொரிய ஜனநாயகக் கட்சி பெரும்வெற்றி பெற்று நாடாளுமன்றத்தை கைப்பற்றியுள்ளதாக கடந்த வியாழக்கிழமை(11) அறிவிக்கப்பட்டுள்ளது.

300 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 192 ஆசனங்களை அது கைப்பற்றியுள்ளது. இந்த தேர்தல் என்பது தற்போதைய அரச தலைவர் ஜுன் சுக் ஜியோலின் அடுத்த 3 வருட பதவிக்கான இடைக் கால கருத்துக்கணிப்பாக பார்க்கப்படுகின்றது.

இந்த தேர்தல் முடிவைத் தொடர்ந்து அவரின் கட்சியான

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## அரச தலைவர் தேர்தல் ரணிலைக் கைவிட மகிந்தா தரப்பு முடிவு

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இயலுமானவரை ஒன்றிணைந்து செயற்படுவோம். முடியாவிடின் விலகிவிடுவோம். பொதுஜன பெரமுனவின் உறுப்பினரை களமிறக்கவே தீர்மானித்துள்ளோம். உத்தியோகபூர்வ அறிவிப்பை வெகு விரைவில் வெளியிடுவோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு வருமாறு பதிலளித்தார்.

**கேள்வி:**

புதிய அரசியல் கூட்டணிகள் ஸ்தாபிக்கப்படுகிறது, கூட்டணி



தொடர்பில் நீங்கள் அவதானம் செலுத்தவில்லையா?

**பதில்:**

புதிய அரசியல் கூட்டணி குறித்து பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். வெகுவிரைவில் பரந்துப்பட்ட அரசியல் கூட்டணிஅமைக்கப்படும்.

**கேள்வி:**

உங்களின் தாய் கட்சியான சுதந்திரக் கட்சி தீ பற்றி எரிகிறதே, பிரச்சினைகளுக்கு தீர்வு காண

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## இஸ்ரேலுடன் இணைந்து ஈரானைத் தாக்க தயாராகின்றது அமெரிக்கா




ஈரானின் மூன்று ஜெனரல்கள் சிரியாவில் வைத்து இஸ்ரேலிய படையினரால் கொல்லப்பட்டதற்கு இஸ்ரேல் மீது ஈரான் பதில் தாக்குதல் நடத்தினால் ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கு அமெரிக்கா முழு உதவிகளையும் வழங்கும் என அமெரிக்காவின் அதிபர் ஜோ பைடன் கடந்த புதன்கிழமை(10) வெள்ளை மாளிகையில் ஊடகவியலாளர்களிடம் பேசும்போது தெரிவித்துள்ளார்.

கடந்த 1 ஆம் நாள் சிரியாவின்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## சீன துறைமுகத்தின் தயவை நாடிவரும் இந்தியாவும் ஐரோப்பாவும்

அம்பாந்தோட்டை துறைமுகத்தை நோக்கி கொள்கலன்களை ஏற்றிவரும் கப்பல்கள் வரப்போவதாக இலங்கை தகவல்கள் தெரிவிக்கின்றன. கொழும்பில் இருந்து 250 கி.மீ. தென்கிழக்காக உள்ள இந்த ஆழ்கடல் துறைமுகத்தை சீனா கட்டியிருந்தது. உலகின்மிகப்பெரும்கொள்கலன்கப்பல்போக்குவரத்து நிறுவனமான எம். எஸ். சி நிறுவனத்தின் கப்பல் 4600 கொள்கலன்களுடன் வந்து 500 கொள்கலன்களை அங்கு கடந்த செவ்வாய்கிழமை(9) இறக்கியுள்ளது.



இந்த கொள்கலன்கள் பின்னர் எம்.எஸ்.சி ஸ்கை இரண்டு என்ற கப்பலில் அடுத்தவாரம் ஏற்றப் படவுள்ளது. மத்தியகிழக்கு, மேற்கு ஆபிரிக்கா மற்றும் இந்தியாவுக்கு இடையிலான கப்பல் போக்குவரத்தில் ஈடுபடும் இந்த நிறுவனங்கள் தற்போது இலங்கையை நாட ஆரம்பித்துள்ளன.

செங்கடலில் ஏற்பட்டுள்ள பதற்றம் தற்போது சீனாவின் துறைமுகத்தை இந்தியா நாடவேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது. எம்.எஸ்.சி நிறுவனத்துடன் எமது அம்பாந்தோட்டை துறைமுகம் மேற்கொண்டுள்ள உடன்பாடு முதலீடுகளை இலங்கையில் அதிகரிக்கும் சாத்தியங்களை ஏற்படுத்தியுள்ளது. கிழக்கு மற்றும் மேற்கு பகுதிக்கான கப்பல் போக்குவரத்தின் பாதையில் துறைமுகம் உள்ளதும் நன்மையானது என இலங்கையின் சி.எம் போட் நிறுவனத்தின் தலைவர் ஜோன்சன் லியூ தெரிவித்துள்ளார்.

துறைமுகம் மிக முக்கிய கேத்திரமுக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் உள்ளதால் அதனை நாம் அதிகளவில் பயன்படுத்தமுடியும். அதன் ஆழம் மற்றும் அமைவிடம் என்பது இலங்கையின் முக்கியத்துவத்தை அதிகரித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் செங்கடலில் கப்பல்கள் தாக்கப்படுவதால் ஐரோப்பாவுக்கும் மத்தியகிழக்கிற்கும் மற்றும் இந்தியாவுக்கும் இடையிலான கப்பல் போக்குவரத்தில் ஒரு தற்காலிக தங்குமிடம் மற்றும் எரிபொருள் நிரப்பும் துறைமுகமாக அம்பாந்தோட்டை துறைமுகத்தை எம். என்.சி நிறுவனம் பயன்படுத்தவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிறுவனம் இதுவரையில் கொழும்பு துறைமுகத்தை பயன்படுத்தியிருந்தது.

செங்கடலில் தாக்குதலினால் கொழும்புத்துறைமுகத்தின்கப்பல்போக்குவரத்தும்இந்தவருடம்33விகித அதிகரிப்பை கண்டிருந்தது. ஆனால் அம்பாந்தோட்டை துறைமுகம் பல நோக்கு கொண்ட கொள்கலன்களை கையாளும் துறைமுகமாக கட்டப்பட்டுள்ளது. ஆனால் அது சீனாவின் பட்டுப்பாதையின் ஒரு அங்கமாக உள்ளதாக மேற்குலக நாடுகள் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றன. அதன் பங்குகளில் சீனாவின் வர்த்தக வங்கி 85 விகிதத்தையும், இலங்கை துறைமுக அதிகாரசபை 15 விகித பங்குகளையும் கொண்டுள்ளது. மேலும் சீனா அதனை 99 வருட குத்தகைக்கு எடுத்துள்ளது.

ஆம்பாந்தோட்டையின் முதலாவது அபிவிருத்தி 2011 இல் ஆரம்பமாகியது. அது பின்னர் 2015 ஆம் ஆண்டு நிறைவடைந்தது. அதற்கான 1.5 பில்லியன் டொலர்களை சீனா முதலீடு செய்திருந்தது. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரும் வெளிநாட்டு முதலீடு அதுவாகும்.

இந்த துறைமுகம் மேலும் வளர்ச்சியடையும்,

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## எதார்த்தத்தை ஏற்றுச் செயற்படுதலுக்கான கொள்கை ஆய்வுகூடத்தால் இறைமையை நிலைப்படுத்தல்

"2040 இல் உலகம்: UK அனைத்துலக விவகாரங்களை அணுகுவதைப் புதுப்பித்தல்" என்கின்ற முக்கியமான கொள்கை உருவாக்க நெறிப்படுத்தலை ஒக்ஸ்வேர்ட் பல்கலைக்கழகத்தின் கேர்ட்போர்ட் கல்லூரியும் இலண்டன் பல்கலைக்கழகத்தின் யூனிவர்சிட்டி கல்லூரியும் இணைந்த கொள்கை ஆய்வுகூடம் வெளியிட்டுள்ளது. இந்த கொள்கை ஆய்வு கூடமானது ஐக்கிய இராச்சியத்திலும் உலகிலுமுள்ள சமுதாயங்கள் எதிர்நோக்கும் சவால்களை விளங்கிக் கையாள்வதற்காகத் தனிப்பட்டவர்களையும் நிறுவனங்களையும் கூட்டுறவான முறைமைகளை உருவாக்கக் கட்டமைக்க அமைக்கப்பட்டுள்ளது. சமுதாயப் பழக்க வழக்கங்கள் சார்ந்த சிக்கல்களை எதிர்கொள்ளும் பலதரப்பட்ட அரசியல், ஆராய்ச்சி, மற்றும் சமுதாய வலைப்பின்னல்களுக்கு இடையில் உரையாடல் வசதிகளை ஏற்படுத்தி வருகிறது. எவருக்காவது இவை குறித்த கருத்துருக்களை அல்லது சவால்களை கண்டறிந்து வெளிப்படுத்த விரும்பினால் policylab@ucl.ac.uk மின்னஞ்சல் முகவரி மூலம் அதனைச் செய்வதற்கான உரிமையையும் அளித்து அனைத்து மக்களுக்கும் உரியதாக இது கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த கொள்கை ஆய்வுகூட அமைப்பின் இணைக் கூட்டுனர்களாக (Co- Conveners) ஏழு பிரதமர்களுக்கு அரசியல் ஆலோசகராக அனுபவம் பெற்ற ஒக்ஸ்வேர்ட் பல்கலைக்கழகத்தின் கேர்ட்போர்ட் கல்லூரியின் தலைவர் டொம் பிளட்சர் (Tom Fletcher) அவர்களும், பிரித்தானியாவின் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய நாடுகள் அபிவிருத்தி அமைச்சு அலுவலகத்தினதும் (FCDO) அனைத்துலக அபிவிருத்தி அலுவலகத்தினதும் (DFID) முன்னாள் இயக்குனராகவும் இந்தோனேசியாவுக்கும் ஆசியான் நாடுகளுக்கும் பிரித்தானிய தூதுவராகவும் அனுபவம் பெற்ற UCL கொள்கை ஆய்வு கூடத்தின் மதிப்புக்குரிய பேராசிரியர் மொசாம் மாலிக் ( Moazzam Malik) அவர்களும் பிரித்தானிய அமைச்சரவையின் செயலாளராக 2018 முதல் 2020 வரையும் கூடவே 2017 முதல் 2020 வரை தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும் பணியாற்றித் தற்போது பிரபுக்கள் சபை உறுப்பினராக உள்ள செட்வில் பிரபு (Lord Mark Sedwill) அவர்களும் உள்ளனர்.

ஈழத்தமிழர்கள் தங்கள் சமுதாயம் எதிர்கொள்ளும் இன்றைய உலகுக்கான சமகாலச் சவால்களை எதிர்கொள்வதற்கு எவ்வாறு புத்திஜீவிகளையும் கருத்துருவாக்கிகளையும் தனிப்பட்டவர்களையும் நிறுவனங்களையும் தங்களோடு தொடர்புடைய பலதரப்பட்ட அரசியல், ஆராய்ச்சி மற்றும் சமுதாய வலைப்பின்னல்களையும் இணைத்து அனைவருக்குமான இவ்வாறான கொள்கை ஆய்வு கூடமொன்றை அமைத்தல் வழி முன்னெடுக்க வேண்டும் என்ற ஒரு யோசனையை ஈழத்தமிழரின் சமகாலத் தேவையைக் கருத்தில் கொண்டு இலக்கு இந்நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறது.

இந்தச் சிற்றறிக்கை 2040இல் உலகம் எவ்வாறு இருக்கும் என்பதைப் பின்வருமாறு சுருக்கமாக எடுத்து விளக்குகிறது. உலகஅரசியல் சமநிலை வலுவானது பொருளாதார வலுவைச் சார்ந்ததாகவுள்ளது. சீனாவிலும் இந்தியாவிலும் தென்கிழக்கு ஆசியாவிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளால் உலகின் பொருளாதாரச் செல்நெறி ஈர்ப்பு கிழக்கு சார்ந்ததாகவுள்ளது. உலக மக்கள்தொகைக் கட்டமைப்பும் மாறியுள்ளது. 2040இல் உலகின் வேலைசெய்யும் வயதில் உள்ள மக்கள்தொகை ஆபிரிக்காவிலும் தெற்காசியாவிலுமே அதிகரித்துக் காணப்படும். நாங்கள் பனிப்போர் கட்டங்கள், அமெரிக்க தலைமையிலான அனைத்துலக ஒழுங்குமுறை என்பவற்றில் இருந்து தொடர்ச்சியாக வளர்ச்சி பெற்ற பன்முனை உலகமானது "பட்டியல்" (‘a la carte) உலகமாக எதையும் கணித்துக் கூற இயலாத அதிகப் பாதுகாப்பற்ற துண்டு துண்டுகளாகியுள்ளது.

இன்றைய உலகு ஒரு தனியான அரசியல் விழுமியங்கள் கொண்ட முறையால் மேலாதிக்கம் செய்யப்படலாம் என்பது ஆழ்ந்து சிந்திப்பின் கடினமானதே. பியூகியூகாமா (Fukuuama) எதிர்வு கூறியது போல பனிப்போர்க் காலத்துடன் வரலாறு முடிந்துவிடவில்லை. உலகில் பெரும்பான்மையானோர் நடுநிலையாளர்களாக எந்தக் கூட்டிலும் வலுக்கட்டாயங்களின் மூலம் இணைக்க முடியாதவர்களாகவே தங்களை நிலைநிறுத்துகின்றார்கள். மேற்குலக விழுமியங்களும் அவற்றின் அனைத்துலக ஒழுங்குமுறைக்கு மேலான மேலாண்மைகளும் இன்று வேறுபடும் மற்றைய நாடுகளின் அரசியல் மற்றும் விழுமியங்களால் சவாலுக்கு உள்ளாக்கப்படுகின்றன. இந்தச் சவால்கள் அதிகாரமையங்களாக உள்ள அரசுக்களால் மட்டுமல்ல நன்கு ஜனநாயக நாடுகளாக உள்ளவற்றாலும் விடுக்கப்படுகின்றன. அதேசமயம் இன்று சட்டத்தின் அடிப்படையிலான அனைத்துலக ஒழுங்குமுறையைத் தக்கவைக்க இயலாது அனைத்துலக நிலத்தோற்றமானது தேசிய மற்றும் உள்ளூர் பிரச்சினைகளுக்கு ஏற்ப நகரும் தன்மையான கூட்டுக்களை உடையதாக உள்ளது. இன்று ஐக்கிய இராச்சியமானது இரண்டாவது உலகப் பெரும்போரின் பின்விளைவாக அதனை அடுத்த காலத்தில் உலகில் செல்வாக்குச் செலுத்தியது போல அரசியல் ரீதியாகவோ பொருளாதார ரீதியாகவோ செல்வாக்குச் செலுத்த இயலாது என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. இது தொடரும் என்பதற்கு இலகுவான கணிப்பாக உலகின் மக்கள்தொகை மாற்றங்களும் கூட்டுப் பொருளாதாரங்களும் உள்ளன.

அனைத்துலக ஒழுங்குமுறை மாறுகையில் மனிதாயம் உள்திறமுள்ள இருத்தலியல் நாடுகடந்த (Potentially existential transnational) சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இதில் காலநிலை மாற்றம், முரண்பாடுகளும் பாதுகாப்பு இன்மைகளும், பெருந்தொற்றுக்கள், பொறுப்பற்ற முறையில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல் உடன் கூடிய செயற்கை நுண்மதிகள், இவற்றுடன் நீதியற்றதும், போதாததும், வீணானதுமான உலகப் பொருளாதார முறைமை என்பன அடங்கும். உலகளாவிய 2030க்கான நீடித்த திறனுள்ள அபிவிருத்தி இலக்குகளுக்கு எதிரான செயற்பாடுகள் தேக்கநிலையை மட்டுமல்ல பின்தள்ளும் தன்மையானதாகவும் அமைந்து பலவிதமான நெருக்கடிகளைத் தோன்றச் செய்கின்றன. தேசியப் பிரச்சனைகள் நாடுகடந்தவையாகப் பிரதிபலிப்புற்று ஒன்றுக்கொன்று மிகுந்த தொடர்புடையனவாக நாடுகளை மாற்றிவிடுகின்றன. பழைய அரசியல் மாதிரிகளால் இதற்குத் தீர்வு காணஇயலாதுள்ளது. இந்த உண்மைகளைக் கவனத்தில் கொண்டு ஈழத்தமிழர்கள் தங்கள் அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்பது இலக்கின் எண்ணமாக உள்ளது.

மேலும் இத்தகைய சூழலில் பிரித்தானியா எவ்வாறு தனது வெளிநாட்டுத் தொடர்புகளைப் புதுப்பிக்க வேண்டும் என்பதை இச்சிற்றறிக்கை பின்வருமாறு எடுத்து விளக்குகிறது. "ஐக்கிய இராச்சியம் வேகமாக மாறுகின்ற இன்றைய உலகில் பிரச்சினைகளில் கரையில் இருந்து மிகத்தூரத்தில் கடலில் இருக்கும் (Off-shore) தேசமாகவும் நடுத்தர வலுவாண்மை (Middle Power) நாடாகவும் விளங்குகிறது. ஐக்கிய இராச்சியத்தின் எதிர்கால வளர்ச்சிகளையும் பாதுகாப்பையும் வடிவமைக்கும் சவால்களும் போக்குகளும் நீண்டகாலத்தன்மை கொண்டனவாகவுள்ளன. எங்களுடைய அனைத்துலக விடயங்கள் தொடர்பான அணுகுமுறைகள் இவற்றைப் பிரதிபலிக்கத் தக்கவையாக அமைந்து எதிர்காலத்தில் உலகில் எங்களுடைய இடத்தை வடிவமைக்க வேண்டும்.

அனைத்துலகில் செல்வாக்குச் செலுத்துவது என்பது உள்நாட்டில் அரசியலிலும் சமுக பொருளாதாரத்திலும் அடைகின்ற வெற்றிகளில் தங்கியுள்ளது. பிரித்தானியா தனது இலக்கு, வரலாறு, ஆர்வங்கள், கரையிலிருந்து வெகுதூரத்தில் கடலில் இருக்கும் தேசமாகவும் நடுத்தர வலுவாண்மையாகவும் உள்ள நிலையில் அதன் வளங்கள் உடைமைகள் என்பவற்றுடன் எவ்வாறு தன்னை ஈடுபடுத்திக் கொள்ளப்போகிறது என்பதில் தெளிவு வேண்டும்.

நாங்கள் அனைத்துலக கூட்டுக்களைப் புதுப்பிப்பதுடன் கனடா யப்பான் நோர்வே சுவிட்ஸ்லாந்து போன்ற நடுத்தர வலுவாண்மை நாடுகள் உலகில் செல்வாக்குச் செலுத்தும் நிலையில் அவற்றுடன் புதிய கூட்டுக்களைக் கட்டியெழுப்பி சில உரிமைகளைப் பகிர்ந்து பன்முகத்தன்மைக்குப் பலமளிக்க வேண்டும். ஐக்கிய இராச்சியத்தின் அனைத்துலக நிறுவனங்களை தெளிவான நீண்ட பணியில் நிலைநிறுத்தக் கூடிய ஆணைகளால் வழிநடத்த வேண்டும். (உதாரணமாக அனைத்துலக விவகாரங்கள் அல்லது உலக விவகாரங்கள் திணைக்களம் ஒன்றை உருவாக்கல்) நாங்கள் அரசின் பாதுகாப்பு கடிவாளமாகவும் கூட்டான நெம்புகோல்களாகவும் விளங்க வேண்டிய தேவையுள்ளது. இதற்குத் சிறந்த மத்திய ஒருங்கிணைப்புக்களும் வழங்கல் கட்டமைப்புக்களும் (உதாரணமாக முகவர்கள், அபிவிருத்தி வங்கிகள்) உள்ளூர் பங்குதாரர்களுக்கான பரவலாக்கப்பட்ட அதிகார நிர்வாகங்கள் தேவை. சரியான மூலவளங்களும் கருவிகளும் ஆற்றல்களும் நிகழ்நிலைப்படுத்தப்பட்ட பொதுநிலை பணிகள் அதன் நுணுக்கங்களுடன் கட்டமைக்கப்பட்டு நிதியீட்டம் செய்யப்பட வேண்டும். இவைகளைக் கவனமாக வாசித்து ஈழத்தமிழர்களும் தங்களுக்கான வெளிநாட்டு விடயங்களைப் புதுப்பிக்க வேண்டும் என்பதே இலக்கின் இவ்வாசிரிய தலையங்கத்தின் நோக்காக உள்ளது.

**ஆசிரியர்**

# ஈழத்தின் தாயே பூபதியே



*ஈழத்தின் தாயே பூபதியே - இங்கு*
*இறையெனத் துணிந்து எழுந்தனையே*
*ஆழமாய் அன்பைச் சொரிந்தனையே — உனது*
*ஆருயிர் தந்து உயர்ந்தனையே*

*சிங்களப் படைகளின் கொடுமைகளால் - நீ*
*சிந்தை பதறிட வெகுண்டெழுந்தாய்*
*அங்கம் சிலிர்த்திடும் முடிவெடுத்தாய் - இந்திய*
*ஆணவம் அடக்கிடும் செயலெடுத்தாய்*

*பாரதம் அனுப்பிய படையினரும் - இங்கு*
*புலிகளை அழிக்க முயன்றதினால்*
*பாவையே யெரிதழ லாகினையே — அவர்க்குப்*
*பாடம் புகட்டத் துணிந்தனையே*

*அண்ணலாம் காந்திஜி அடிச்சுவட்டில்*
*அகிம்சைப் போரினை முன்னெடுத்தாய்*
*எண்ணித் துணிந்துடல் கருக்கினையே — நீ*
*துணிந்தொரு சரித்திரம் படைத்தனையே*

*புதல்வர்க ளிருவரைப் பறிகொடுத்தாய் - இங்கு*
*புலம்பிடும் மக்களின் துயருணர்ந்தாய்*
*கதறிய தமிழர்கட் குறுதுணையாய் - அருட்*
*காரிகையே யுயிர் அர்ப்பணித்தாய்*

*தாயகம் கலங்கிக் கதற வைத்தாய் - எங்கள்*
*தாயாகித் தமிழரை யணைத்துக்கொண்டாய்*
*சாய்ந்தாலும் உனைத்தினம் தொழுதெழுவோம் - பாரில்*
*சரித்திரம் படைத்தனை பூபதியம்மா*

கவிஞர் ***மாரீசன்***

# ரணிலுக்காக தயாராகும் கூட்டணி!

# மொட்டுக்குள் அதிகரிக்கும் பிளவு!!



**அகிலன்**

ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரிப்பதற்காக "மெகா கூட்டணி" ஒன்று உருவாக்கப்படும் நிலையில், பெரமுன இதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பதில் தடுமாறிக் கொண்டிருக்கின்றது. சிறுபான்மையின மக்களின் வாக்குகள் தமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் சஜித் அணி இருக்கின்றது. சிங்கள ஆதரவைப் பாதிக்காத வகையில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கு வழி உள்ளதா என ஜே.வி.பி. அங்கலாய்கிறது. இந்தப் பின்னணியில் இந்த வார தேர்தல் கள அப்டேட் என்ன என்பதைப் பார்ப்போம்.

ஜனாதிபதித் தேர்தலை நோக்கி சூடு பிடித்திருந்த அரசியல் களம் பசில் ராஜபக்ஷ அமெரிக்காவிலிருந்து வந்திறங்கிய தருணத்திலிருந்து விறுவிறுப்பாகியது. ரணில் விக்கிரமசிங்கவுடன் அவர் ஆரம்பித்த பேச்சுக்கள் தோல்வியடைந்ததையடுத்து, அடுத்ததாக என்ன செய்வது என்ற தடுமாற்றத்துடன் மொட்டு கட்சி நிற்கின்றது. ஊடகச் சந்திப்புக்களிலும், சமூக ஊடகங்களிலும் வீராவேசமாக அவர்கள் பேசிக்கொண்டாலும், மொட்டுவின் நிலை பரிதாபத்துக்குரிய ஒன்றாகத்தான் இருக்கின்றது. தற்போதைய நிலையில், மொட்டு அணியின் சார்பில் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கப்படுவார் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். ஆனால், களமிறக்கப்படவுள்ளவர் யார் என்பது ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபுர்வ அறிவிப்பு வெளிவந்த பின்னர்தான் தெரியப்படுத்தப்படும் என நாமல் ராஜபக்ஷ அறிவித்திருக்கின்றார்.

அதேவேளையில், ஜனாதிபதித் தேர்தல் குறித்தோ, அதில் யாரை ஆதரிப்பது என் பதையிட்டோ தனிப்பட்ட முறையில் கருத்துக்கள் எதனையும் வெளியிட வேண்டாம் என பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கு கட்சித் தலைமை கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளது. பெரமுன உறுப்பினர்கள் பலர் ரணிலுக்கு பகிரங்கமாக ஆதரவைத் தெரிவித்து வருகின்றார்கள். அத்துடன் பெரமுனவில் போட்டியிடுவதற்குத் தகுதியான வேட்பாளர்கள் யாரும் இல்லை என்றும் அவர்கள் வெளிப்படையாகக் கூறிவருவது ராஜபக்ஷக்களுக்கு கடும் சீற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அத னால்தான் இந்த வாயப்பூட்டு!



கடந்த பொதுத் தேர்தலிலும் ஜனாதிபதித் தேர்தலிலும் மாபெரும் வெற்றியைப் பெற்ற பொது ஜன பெரமுன வரப்போகும் தேர்தல்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பதில் தடுமாறிக்கொண்டிருப்பதை இது வெளிப்படுத்துகின்றது. அதேவேளை, களத்திலிருந்து தாம் ஒதுங்கியிருப்பதும் தமது எதிர்காலத்துக்கு ஆபத்தானதாகிவிடலாம் என்ற அச்சமும் அவர்களுக்கு இருக்கின்றது. இவ்வார ஆரம்பத்தில் இடம்பெற்ற பெரமுனவின் அரசியல் குழுக் கூட்டத்தில் இந்த நிலைமையைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. கட்சிக்குள் கருத்து முரண்பாடுகள் தீவிரமடைந்திருக்கும் பின்னணியில், கட்சியின் சக்தி வாய்ந்த ஒரு குழு வெளியேறி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்காக ஐ.தே.க. வில் இணைந்துகொள்ளவிருப்பதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவந்திருக்கின்றது.

பெரமுனவின் எம்.பி.க்கள் பலரும் ராஜபக்ஷக்களை நம்பிக்கொண்டிருப்பதால் தமக்கு எதிர்காலம் இல்லாமல் போய்விடலாம் என்ற அச்சத்தில் உள்ளார்கள். அதனால்தான் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரிக்க வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கின்றார்கள். ரணிலை ஜனாதிபதியாக்கினால், அவருடன் இணைந்து பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதுதான் தமக்குச் சாதகமானது என்பது அவர்களது கணிப்பு. இவ்வாறு அதிகரித்துவரும் அதிருப்தியை தணிப்பதற்கான ஒரு முயற்சியாகத்தான் ரணிலுடன் பேச்சுக்களை பசில் நடத்தினார். ஆனால், அவை தோல்வியடைந்துள்ள நிலையில், ராஜபக்ஷக்களின் தடுமாற்றம் அதிகரித்துள்ளது. பெரமுனவின் அரசியல்குழு கடந்த திங்கட்கிழமை அவசரமாகக் கூட்டப்பட்டதும் அதனால்தான்.

பெரமுனவின் அரசியல் குழுவின் கூட்டத்தில்மூன்று முக்கியதீர்மானங்கள்எடுக்கப்பட்டதாக அதன் புதிய தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் நாமல் ராஜபக்ஷ தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்திருக்கின்றார். அனைத்து தேர்தல் மாவட்டங்களுக்கும் அமைப்பாளர்களை நியமித்தல். மே தினக் கூட்டத்தை வெற்றிகரமாக நடத்துதல், கட்சி யாப்பை மீறிச்செயற்படுபவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக குழு ஒன்றை அமைத்தல் என்பனதான் அந்த முக்கிய தீர்மானங்கள்.

மே தினத்தில் தமது பலத்தைக் காட்டுவதற்கும், தேர்தல்களை இலக்காகக் கொண்டு மாவட்ட அமைப்பாளர்களை நியமித்து கிளைகளைப் பலப்படுத்துவதும் அவர்களுடைய நோக்கம் என்று தெரிகிறது. அதேவேளை, கட்சி தாவத் தயாராக இருப்பவர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த எச்சரிக்கை எந்தளவுக்கு கட்சித் தாவல்களைத் தடுக்கும் என்பது கேள்விக்குறிதான்!

ரணிலுடன் பசில் நடத்திய பேச்சுக்கள் தோல்வியடைந்த பின்னணியிலேயே பெரமுனவின் அரசியல் குழு அவசரமாகக் கூட்டப்பட்டது. பொதுத் தேர்தலே முதலில் நடத்தப்பட வேண்டும் என்பதை இந்தப் பேச்சுக்களின் போது பசில் வலியுறுத்தியிருந்தார் என்பதை இந்தப் பகுதியில் ஏற்கனவே நாம் குறிப்பிட்டிருந்தோம். ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடத்தப்பட்டால் பெரமுனவுக்கு மூன்று தெரிவுகள் இருந்தன. ஒன்று - ரணிலை ஆதரிப்பது. இரண்டு - தனியாக ஒருவரை களமிறக்குவது. மூன்றாவது போட்டியிடாமல் இருப்பது. இந்த மூன்று தெரிவுகளுமே தமது கட்சியின் எதிர்காலத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால்தான் பாராளுமன்றத் தேர்தலை முதலில் நடத்து வதற்கான அழுத்தத்தை பசில் கொடுத்தார் பொதுத் தேர்தலில் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மையைப் பெறமுடியாமல் போகும் என்பதால், தம்மால் பேரம் பேசக் கூடியதாக இருக்கும் என்பது அவர்களது கணிப்பு!

ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதற்கு பொருத்தமான ஒருவர் பெரமுனவில் இல்லை. அவ்வாறு ஒருவரை நிறுத்தினாலும்அவர் நான்காவதாக வரவேண்டிய நிலைமைதான் உள்ளது என்பதைகருத்துக்கணிப்புக்கள்தெளிவாகவெளிப்படுத்தியிருந்தன. இதில் படு தோல்வியைச் சந்தித்த உடனடி யாக பொதுத் தேர்தலையும் எதிர்கொண்டால் அதிலும் நிலைமை இன்னும் மோசமாக இருக்கும் என்பதுதான் பசிலின் அச்சத்துக்குக் காரணம்.

ஆனால், அவசரமாக பராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை முதலில் நடத்துவதற்கு ரணில் தயாராகவில்லை. அவரது கட்சியை விட, தனிப்பட்ட முறையில் அவரது மக்கள் செல்வாக்கு இப்போது அதிகமாக இருப்பதாக அவர் கருதுவது இதற்குக் காரணம். மக்களின் வாக்குகளின் மூலம் ஜனாதிபதியானால், அந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு பொதுத் தேர்தலை எதிர்கொள்வது தனக்கு சாதகமானது என ரணில் கணிக்கிறார். இந்த நிலையில், தமது கட்சியின் சார்பில் ஒருவரை நிறுத்துவது என பெரமுன தீர்மானித்திருந்தாலும், இறுதி வேளையில் அதில் மாற்றம் ஏற்படலாம்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# பிளவை நோக்கி தமிழரசுக் கட்சி?



**ஜனாதிபதித் தேர்தலை நோக்கி நாடு சென்றுகொண்டிருக்கும் நிலையில், தமிழ்க் கட்சிகள் சிலவற்றால் முன்வைக்கப்பட்ட தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கருத்து, வாதப் பிரதிவாதங்களுக்கு உள்ளாகியிருக்கின்றது. மறுபுறம் தமிழரசுக் கட்சிக்குள் உருவாகியிருக்கும் முரண்பாடுகள் அந்தக் கட்சி பிளவுபடுமா என்ற கேள்வியை எழுப்பியிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தையும் ஓரணியில் இணைக்கும் முயற்சிகளையும் இது பலவீனப்படுத்தியிருக்கின்றது. இந்தப் பின்னணியில் கள நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் கோபாலபிள்ளை அமிர்தலிங்கம் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கேதருகின்றோம் இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

## பேராசிரியர் அமிர்தலிங்கம் செவ்வி

**பொதுத் தேர்தல்தான் முதலில் நடத்தப்பட வேண்டும் என்பதற்கான அழுத்தத்தை பொது ஜன பெரமுன கொடுத்தது. ஆனால் இப்போது ஜனாதிபதித் தேர்தல்தான் முதலில் நடத்தப்படும் என்பது பெருமளவுக்கு உறுதியாகியிருக்கின்றது. இந்த முரண்பாடான போக்கிற்கு காரணம் என்ன?**

பொது ஜன பெரமுனவைப் பொறுத்தவரையில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்று முயற்சிக்கின்றார்கள். பொதுத் தேர்தலின் மூலம் சில ஆசனங்களைக் கைப்பற்றி எதிர்கால ஜனாதிபதி தமக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்கவிடாமல் தடுக்கலாம் என அவர்கள் சிந்திக்கின்றார்கள். ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடைபெற்று அதில் யார் ஜனாதிபதியாக வந்தாலும், அதன் பின்னர் வரக்கூடிய பாராளுமன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுன வெற்றிபெறுவது மிகவும் கடினமானது. மிகவும் குறைந்த ஆசனங்களையே அவர்களினால் பெறக்கூடியதாக இருக்கும். அதனைவிட, அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த சிலர் கூட, ஜனாதிபதியாக வருபவரின் கட்சியுடன் இணைந்துகொள்வதற்கும் வாய்ப்புள்ளது.




அவ்வாறான சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்தில் அவர்களுடைய பலம் கடுமையாக வீழ்ச்சியடைந்து எதிர்காலத்தில் வரக்கூடிய அரசாங்கங்கள் தம்மீதான சட்ட நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தலாம் என்று அஞ்சுகிறார்கள். அதனால் அவர்கள் தங்களைப் பாதுகாப்பதற்கு - தமது எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கு பொதுத் தேர்தல் முதலில் நடைபெற வேண்டும் என்று விரும்புகின்றார்கள். அவ்வாறு நிகழ்ந்தால், பாராளுமன்றத்தில் எந்வொரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காமல் போகலாம். புதிதாக வரப்போகும் ஜனாதிபதிக்கும் இதனால் மிகப் பெரிய சிக்கல் உருவாகும்.

பாராளுமன்றம் தொங்கு பாராளுமன்றமாக அமையலாம். பாராளுமன்றத்தை நான்கு வருடங்களுக்குக் கலைக்கவும் முடியாது. அது நாட்டில் பாரிய சமூக, அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளையும் உருவாக்கும் என்பதையும் ஜனாதிபதி உணர்ந்திருக்கின்றார்.

**ஜனாதிபதித் தேர்தலை நோக்கி நாடு சென்றுகொண்டிருக்கும் நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் மத்தியில் ஒரு குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. யாரையாவது ஆதரிப்பதா, பகிஷ்கரிப்பதா என்ற கேள்விகளுக்கு மத்தியில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவது என்பது குறித்தும் முக்கியமாகப் பேசப்படுகின்றது. பொதுவேட்பாளர் என்ற விடயத்தைப் பொறுத்தவரையில் உங்கள் பார்வை என்ன?**

1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியலமைப்பின் படி இலங்கையிலுள்ள அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டு தேர்தல் நடைபெற்ற போது அது தமிழ் மக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அது தமிழ் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற ரீதியில் யாழ். மாவட்ட மக்கள் அந்தத் தேர்தலைப் புறக்கணித்தார்கள். அன்று முதல் பல்வேறுபட்ட புறக்கணிப்புக்களை தமிழ் மக்கள் செய்திருக்கின்றார்கள்.

இப்போது பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்பதும், நாம் சிங்கள வேட்பாளர்கள் எவருக்கும் வாக்களிக்க மாட்டோம் என வாக்களிப்பைப் புறக்கணிப்பதற்கு சமமானது தான். அவ்வாறு பொதுவேட்பாளராக தமிழர் ஒருவரை களமிறக்கும் போது, அவரால் வெற்றிபெற முடியாது என்பதைத் தெரிந்துதான் தமிழ் மக்கள் அவருக்கு வாக்களிக்க வேண்டும். குமார் பொன்னம்பலம் ஒரு தடவை ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டவர். அவருக்கும் தமிழ்ப் பகுதிகளில் கூட அதிகளவு வாக்குகள் கிடைக்கவில்லை.

இந்த விடயத்தைப் பொறுத்தவரையில் இரண்டு விடயங்கள் கவனிக்கப்பட வேண்டியவை. தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து இதற்கான தீர்மானத்தை எடுப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. தமிழரசுக் கட்சி ஒருபுறம் இருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்றவர்கள் மற்றொரு அணியாக இருக்கின்றார்கள். கஜேந்திரகுமார்பொன்னம்பலம் மற்றொரு அணியில் இருக்கின்றார். நீதியரசர் விக்னேஸ்வரனின் அணி மற்றொன்றாக இருக்கின்றது. இந்த நான்கு தரப்புக்களும் இணைந்து ஓரணியாக வரக்கூடிய வாய்ப்புக்கள் இல்லை. வேறுபட்ட முடிவுகளைத்தான் எடுக்கப்போகின்றார்கள். இதனைவிட பொது வேட்பாளர் எந்தளவுக்குப் பொது வேட்பாளராக இருப்பார் என்றொரு கேள்வி இருக்கின்றது.

என்ன முடிவை எடுத்தாலும் தமிழ் மக்களுக்கு அதனால் ஏற்படக்கூடிய சாதக, பாதக அம்சங்களை அவர்கள் தெளிவாகக்கூற வேண்டும். பொது வேட்பாளரை நாங்கள் நிறுத்துகிறோம். நீங்கள் வாக்களியுங்கள். பெரும்பான்மை இன வேட்பாளர்களை நாங்கள் நிராகரிக்கின்றோம். அதனால் தமிழ் மக்களுக்கு சாதகமானவை என்ன பாதகமானவை என்ன என்பதையெல்லாம் இவர்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

**தமிழ் அரசியல் கட்சிகள் தவிர்ந்த சிவில் அமைப்புக்கள் இந்த விடயத்தில் செல்வாக்கு செலுத்தக்கூடியவையாக இருக்குமா?**

சிவில் அமைப்புக்கள் அவ்வாறு கூறலாம். ஆனால் எம்மிடம் அவ்வாறு பலம்பொருந்திய சிவில் அமைப்புக்கள் இருப்பதாகத் தெரியவில்லை. அதேவேளையில், அரசியல் கட்சிகள் ஒரு முடிவை எடுக்க சிவில் அமைப்புக்கள் இன்னொரு முடிவை எடுப்பது போன்றன தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும் என்று நான் நினைக்கவில்லை. சிவில் அமைப்புக்கள் அரசியல் கட்சிகளை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து ஒரு இலக்கை நோக்கி நகர்த்துவதற்கு முயற்சிக்கலாம். ஆனால், இது எவ்வாறு நடைபெறப்போகின்றது என்பதற்கு காலம்தான் பதில் சொல்லப்போகின்றது.

**தமிழரசுக் கட்சிக்குள் உருவாகிய முரண்பாடு இன்று ஒரு பிளவாகி நீதிமன்றத்தின் முன்பாகச் சென்றுள்ளது. இந்தப் பிளவு தமிழ் மக்களுடைய அரசியலில் எந்தளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்?**

சம்பந்தன் அரசியலைவிட்டு விலகும் போது, தமிழரசுக் கட்சிக்குள் பாரிய பிளவு ஏற்படும் என்பது முன்னரே அனுமானிக்கப்பட்ட ஒன்றுதான். ஏனெனில் அவர் தனக்கு அடுத்ததாக ஒரு தலைவரை உருவாக்கத் தவறிவிட்டார். தந்தை செல்வா, அமிர்தலிங்கத்திடம் தலைமையைக்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# துண்டாடப்படும் தமிழர் தாயகமும் தடுப்பதற்கு நாதியற்ற தமிழர்களும்

மட்டு.நகரான்

தமிழர் தாயகம் துண்டாடப்படும் அவலங்களும் அதனை தடுப்பதற்கு நாதியற்றவர்களாக தமிழர்களும் தமிழர்தாயகத்தில் தொடர்ச்சியான வேதனையான காலங்களையே கடத்தி வருகின்றனர்.அதிலும் தென் தமிழீழம் என்ற கிழக்கில் தமிழர்களின் இருப்பு என்பது தொடர்ச்சியாக கேள்விக்குட்படுத்தப்பட்டே வருகின்றது.




கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பினை கூறுபோடுவதற்கு தொடர்ச்சியான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. குறிப்பாக கிழக்கில் தமிழர்கள் வாழும் அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் இருப்பு என்பது மிகவும்ஆபத்தானதாக மாறிவருகின்றது.பேரின வாத சக்திகள் கிழக்கில் காணப்படும் மதவாத சக்திகளை தமிழர்களுக்கு எதிராக பயன்படுத்தி தொடர்ச்சியாக தமிழர்களின் இருப்பினை கேள்விக்குறியாக்கிவருகின்றது. இந்த நிலைமையினைஎதிர்கொள்ளமுடியாதுஅம்பாறை மாவட்ட தமிழர்கள் தொடர்ச்சியாக போராடும் நிலைக்குள்ளேயே தள்ளப்பட்டுவருகின்றனர்.

கதிர்காமம் தொடக்கம் அம்பாறை நகரம் வரையில் தமிழர்களின் பூர்வீக பல வரலாற்று சிறப்புமிக்க இடங்கள் பறிபோன நிலையில் இருக்கும் இடத்தினை பாதுகாப்பதற்கு தொடர்ச்சியாக போராடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தினைப்பொறுத்த வரையில் மட்டக்களப்பு மாவட்டத்துடனேயே அம்பாறை மாவட்டம் தமிழர்களின் தனிச் சிறப்புமிக்க மாவட்டமாகயிருந்து வந்தது. 1953ஆம் ஆண்டு கல்லோயாத்திட்டம் கொண்டு வரப்பட்டு அங்கு சிங்களவர்கள் பெருமளவில் குடியேற்றப்பட்டதை தொடர்ந்து 1961ஆம் ஆண்டு மட்டக்களப்பு,அம்பாறை மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு தமிழர்களை கூறுபோடும் செயற்பாடு மிகவும் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டது.



அம்பாறை மாவட்டம் தொடர்பில் தமிழ் தேசியபரப்பில் அதிகளவு நாட்டம் கொள்ளப்படாவிட்டாலும் தமிழீழ விடுதலைப் புலிகள் கவனத்தில் கொள்ளப்பட்டது.அதன் காரணமாகவே கிழக்கின் பிரதான தளங்களில் ஒன்றாக கஞ்சிகுடிச்சாறு தளம் இருந்தது. எனினும் இனங்களிடையே நல்லுறவினை ஏற்படுத்தவேண்டும் என்ற ரீதியில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் பல்வேறு விட்டுக் கொடுப்புகள் செய்யப்பட, அந்த விட்டுக்கொடுப்புகளும் ஏதோவொரு வகையில் தமிழர்களின் இருப்புக்கு ஆபத்தாகமுடிந்தாலும் தமிழீழ விடுதலைப்புலிகள் காலத்திலேயே அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் இருப்பு ஓரளவு பாதுகாக்கப்பட்டது.

ஆனால் பல்வேறு வகையிலும் அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் விரட்டப்பட்டும் வந்த வரலாறே அதிகமாகயிருக்கின்றது.இன்று அம்பாறை மாவட்டத்தில் சுமார் 18க்கும் மேற்பட்ட தமிழ் கிராமங்கள் காணாமல்போயுள்ளன.எதிர்காலத்தில் தமிழர்களின் இருப்பே காணாமல்போகும் நிலையும் ஏற்படலாம்.

இவ்வாறான நிலையிலேயே கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்காக தமிழர்கள் தொடர்ச்சியாக போராட்டம் நடாத்திவரும் நிலைமையினை காணமுடிகின்றது.

இந்த போராட்டம் என்பது வெறுமனே ஒரு கோரிக்கையாகவே நோக்கப்படுகின்றதே தவிர அது தமிழர்களுக்கான இருப்புக்கான போராட்டமாக யாரும் பார்க்கும் நிலையில் இல்லை.

கடந்த 18நாட்களாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் அதிகாரங்களை குறைப்பதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையினை தடுத்து நிறுத்துவதற்காக தமிழர்கள் போராடி வருகின்றனர்.வெறுமனே இதனை ஒரு நிர்வாக ரீதியான பிரச்சினையாகவோ ஒரு சமூகம்சார்ந்த பிரச்சினையாகவோ யாரும் பார்ப்பார்களேயானால் அவர்கள் அரசியல் அறிவு அற்றவர்களாகவே நோக்கப்படவேண்டும்.




கிழக்கு மாகாணத்தில் பிரித்தாளும் தந்திரத்தினை முன்னெடுத்துவரும் சிங்கள பேரினவாத அரசுகள் முன்னெடுத்துவரும் தமிழர்களுக்கு எதிரான போக்கில் முஸ்லிம்களை பகடைக் காய்களாக கொண்டும் நடத்தும் விடயங்களே இந்த பிரச்சினைக்கு முக்கிய காரணமாக அமைகின்றது.

கல்முனை பிரதேசம் என்பதே தமிழர்கள் பூர்வீகமாக வாழும் பகுதி என்பதுடன் முஸ்லிம் மக்கள் தமது வர்த்தக நடவடிக் கைகளை முன்னெடுக்கும் நகரமாக காலம் காலமாகயிருந்து வந்தது.

இதன்காரணமாகவே தமிழர்களையும் முஸ்லிம்களையும் புட்டும் தேங்காய்ப்பூவாகவும் பார்க்கும் நிலையிருந்தது.இங்கிருந்த அரசியலும் தமிழர்களுடன் இணைந்த அரசியலாகவே பெரும்பாலும் இருந்துவந்தது.முஸ்லிம்களின் தலைவராகயிருந்த அஸ்ரப் அவர்களும் இலங்கை தமிழரசுக்கட்சியின் ஊடாகவே அரசியலுக்குள் வந்தார் என்பதுடன் விலாசத்தையும் தேடிக்கொண்டார்.

இவ்வாறான நிலையில் இருசமூகங்கள் மத்தியிலும் திட்டமிட்டு குழப்பங்களை ஏற்படுத்தி தமிழர்கள் பகுதிகளை சகோதர இனத்தைக்கொண்டே கபளீகரம் செய்யும் செயற்பாடுகளை சிங்கள அரசு திட்டமிட்டு முன்னெடுத்துவந்தது.அதற்காக கிழக்கில் முஸ்லிம் அரசியலை தனியாக வளர்த்து அதன் ஊடாக இனவாதத்தினை இருசமூகங்கள் மத்தியில் விதைத்துதமிழர்களின்இருப்பினைதொடர்ச்சியாக கேள்விக்குள்ளாக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்தது.ஒரு புறம் சிங்களவர்களை குடியேற்றி தமிழர்களின் நிலங்களை சுரண்டியவர்கள் மறுபுறத்தில் இஸ்லாமியர்களில் உள்ள கடும்போக்கானவர்களை பயன்படுத்தி தமிழர்களுடன் மோதல்களை ஏற்படுத்தி அவர்களை இடம்பெயரச்செய்து அவர்களின் நிலங்களை அபகரிக்கும் செயற்பாடுகளை மிகவும் திட்டமிட்டு முன்னெடுத்துவந்தனர்.இந்த செயற்பாடுகளை இஸ்லாமிய சமூகத்தில் உள்ள நேர்மையாக சிந்திப்பவர்களும் கடந்த காலத்தில் வெளிப்படையாக தெரிவித்த வரலாறுகளும் உண்டு.

கல்முனையை பொறுத்த வரையில் சுமார் 90 வீதமான தமிழர்களே வசிக்கின்றனர். கல்முனை மாநகரில் வர்த்தக நிலையங்களை முஸ்லிம் வர்த்தகர்கள் கொண்டிருக்கின்ற போதிலும் அவர்களில் பெரும்பாலானவர்கள் கல்முனைக்குடி மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களை சேர்ந்தவர்களாகவுள்ளனர்.



எனினும் கல்முனையில் தமிழர்கள் அதிகளவில் வசிக்கின்றனர்.கல்முனை நகரினை சூழ தமிழ் மக்களே பூர்வீகமாக வசிக்கின்றனர் என்பதற்கான ஆதாரங்களாக நகர் உட்பட தமிழர்களின் அடையாளங்கள் நிரம்பியுள்ளன.கல்முனை நகரில் உள்ள சந்தாங்கேணி விளையாட்டு மைதானம் கூட சந்தானேஸ்வரர் ஆலயத்தின் தீர்த்தக்கேணியை நிரப்பி அமைக்கப்பட்ட மைதானமாகவே இருந்தது.இவையெல்லாம் இன்று இன்றைய முஸ்லிம் தலைமைமுறை இளைஞர்களுக்கு தெரியப்படுத்தாமல் மறைக்கப்பட்டு கல்முனை முஸ்லிம்களின் தலைநகரம்,இதயம் என்ற கோசங்கள் விதைக்கப்படுவது மிகவும் வேதனையான விடயமாகும்.

கல்முனை என்பது உதவி அரசாங்க அதிபர் பிரிவாக ஆரம்பிக்கப்பட்டகாலம் தொடக்கம் அங்கு இஸ்லாமியர் ஒருவரை தலைமை அதிகாரியாக நியமித்து தொடர்ச்சியாக தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளையும் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே விரிசல்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளை சிங்கள பேரினவாத அரசுகள் முன்னெடுத்துவருகின்றன.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரி யார்?

திருமலையான்

2019 ஏப்ரல் 21 அன்று வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அப்பாவி பொது மக்கள் 269 பேரின் உயிர்களை காவு கொள்ள காரணமான ஈஸ்டர் தற்கொலை தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார் என்பதை வெளிப்படுத்தி உண்மைத்தன்மையை வெளிக் கொண்டுவரப்படவேண்டும்.



கடந்த காலங்களில் சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தினை பெரும்பான்மை மக்களினதும் நாட்டினதும் எதிரிகளாக சித்தரித்துக் காட்டுவதன் மூலம் அரசியல் இலாபம் தேடுகின்ற திட்டமிட்ட செயற்பாடுகள் தொடராக அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருந்தன.

அதன் அடிப்படையில் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட ஒரு கொடூர சம்பவமே இந்த ஈஸ்டர் தாக்குதலாகும்.

இவ்வாறான ஒரு தாக்குதலை நடத்துவதற்கு முஸ்லிம் சமூகத்திற்கு எந்த ஒரு தேவையும் இருக்கவில்லை.

இருந்தாலும் நிரபராதிகளான அப்பாவி முஸ்லீம் சமூகம் அநியாயமாக குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டதோடு உயிர்கள், பல கோடி சொத்துக்கள் என பாரிய அழிவுகளுக்கும் முகம் கொடுத்தனர்.

எனவே பிரதான சூத்திரதாரியை தனக்கு தெரியும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் கூறுவதன் அடிப்படையில் துரிதமாக விசாரணையை நடாத்தி உண்மையான சூத்திர தாரியை நாட்டு மக்களுக்கும் தெரியப்படுத்துவதோடு உரிய தண்டனையை வழங்கவும் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பாவி முஸ்லிம்களை அப்பட்டமாக கைது செய்து சிறையில் அடைத்தார்கள் பயங்கரவாத சட்டம் என்கின்ற பெயரில் மன்னாரில் இளைஞன் அஹ்னாபை அடைத்தார்கள், நாடாளுமன்ற உறுப்பினர் றிசாட் பதியுதீன் போன்ற அரசியல் தலைவர்களையும் பழி வாங்கினார்கள் கோத்தபாய அரசாங்கம் இவ்வாறானவற்றை குறிப்பாக சிறுபான்மை சமூகத்தை திட்டமிட்டு பழிவாங்கியது.



ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திர தாரியை வெளிப்படுத்த முடியாத கோழைகளும் தகுதியற்றவர்களும் உடனடியாக பதவி விலக வேண்டும்.

ஈஸ்டர் தாக்குதல் நடாத்தப்பட்டு சுமார் ஐந்து வருடங்கள் கடந்துள்ளன. 270 அப்பாவி மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. 350க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். அதனை தொடர்ந்து பல்லாயிரம் கோடிகள் பெறுமதியான சொத்துக்களும் உடமைகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

சூத்திர தாரிகளை கண்டு பிடித்து தண்டனை வழங்க வேண்டும் என்பதற்காக சுயாதீன ஆணைக் குழு, பாராளுமன்ற தெரிவுக்குழு, விசேட பொலீஸ் குழுக்கள், புலனாய்வு குழுக்கள் என பல குழுக்கள் களத்தில் இறக்கப் பட்டார்கள். அப்பாவி முஸ்லீம்களும் தலைமைகளும் நூற்றுக் கணக்கில் கைது செய்யப் பட்டார்கள். இன்னும் சிறையில் வாடுகிறார்கள். இதற்காக பல நூறு கோடி மக்களின் வரிப் பணமும் அநியாயமாக செலவு செய்யப்பட்டன.




ஆனாலும் இது வரை அதற்கான சூத்திர தாரிகள் வெளிப்படுத்தப்படவுமில்லை. தண்டனைகள் பெற்றுக் கொடுக்கப் படவுமில்லை எனின் இந்த ஆணைக்குழுக்களாலும் தெரிவுக் குழுக்களாலும் அதில் பணியாற்றியவர் களாலும் என்ன பலன் கிடைத்தது? அவர்கள் தகுதி இல்லாதவர்களாஎன்ற கேள்வியை எழுப்புகின்றது. அது மாத்திரமன்றி குறிப்பிட்ட சம்பவத்திற்காக களத்தில் இறக்கப்பட்ட புலனாய்வாளர்கள் பொலீஸார்கள் உயரதிகாரிகள் என அனைவருக்கும் சம்பளமாக வழங்கப் படுகின்ற வரிப் பணத்திற்கு என்ன பலன் கிடைத்தது?

அப்பாவி முஸ்லிம்கள் மூவரை கொரப்பதான பகுதியைச் சேர்ந்த அப்பாவி முஸ்லிம்கள் மூவரைக் கைதுசெய்தார்கள். கைது செய்யப்பட்டவர்கள் மீண்டும் உயர் நீதிமனறில் வழக்கு தாக்கல் செய்தார்கள் .உயர் நீதிமன்ற தீர்ப்பு மூவருக்கும் சாதகமாக அமைந்ததால் கைது செய்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்டவர்கள் நீதிமன்றில் மன்னிப்பு கோரினர் இப்படியாக அப்பட்டமான கைதுகள் மூலம் முஸ்லிம் சமூகத்தை அழிக்க நினைத்தார்கள் என்பதை இதன் மூலம் கண்டு கொள்ளலாம்.

எமது வாக்குகளால் பதவிக்கு வந்து எம்மை தொடர்ந்தும் ஏமாற்றி வரும் ஆட்சியாளர்களும் இவ்வாறான அதிகாரிகளும் தாங்கள் வகிக்கும் பதவிகளுக்கு தகுதியற்றவர்கள் என கருதி அனைவரும் பதவி விலக வேண்டியவர்களே



ஒரே நாடு ஒரே சட்டம் என்று ஓங்கி ஒலித்த இந் நாட்டில் சிறுபான்மை பெரும்பான்மை சமூகங்களுக்கு என வெவ்வேறான நீதியா நிலைநாட்டப் படுகின்றன எனற கேள்வியும் எழுகின்றது.

கடந்த நல்லாட்சி காலத்திலும் அதனை அண்மித்த காலங்களிலும் சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தின்மீது அநியாயமாகபல்வேறுதிட்டமிட்ட தாக்குதல்கள் மூலம் உயிர்கள் உடைமைகள் என பல கோடிகள் வீணாக அழிக்கப்பட்டன.

புத்தர் சிலைகளின் பாதுகாப்பு கண்ணாடிகள் சேதமாக்கப்பட்ட போது குற்றவாளியை கைது செய்து சிறைகளில் அடைத்து தண்டனையை பெற்றுக்கொடுத்த அரசு பட்டப் பகலில் பேரணியாக வந்து பள்ளிகளை உடைத்த குற்றவாளிகளை கைது செய்ய முயற்சிக்கவும் இல்லை. நட்ட ஈடுகள் வழங்கவுமில்லை.

முஸ்லீம்களின் உயிர்கள், தொழிற்சாலைகள், வர்த்தக நிலையங்கள், வாகனங்கள் என அழிக்கப் பட்ட போதும் இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் பொறுப்பானவர்கள் பார்த்துக் கொண்டே இருக்கின்றார்கள்.பல கோடி சொத்துக்கள் நாஷமாக்கப்பட்டன



சிறுபான்மை முஸ்லீம் மக்களின் உயிர் உடைமைகளின்அழிப்புகளுக்குசட்ட நடவடிக்கை எடுக்காமல் பாரபட்சமாக இருப்பதானது இந் நாட்டில் வெவ்வேறு சட்டங்கள் நடைமுறையில் உள்ளனவா? என்ற கேள்வியை எழுப்புகின்றன.

எனவே நாட்டின் ஜனாதிபதியான ரணில் விக்ரமசிங்க அவர்கள் மேற்குறித்த விடயங்களுக்கு இனிமேலாவது நடவடிக்கை எடுத்து நீதியை நிலைநாட்டி உரிய இழப்பீடுகளையாவது வழங்க நடவடிக்கை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

• • •

# தமிழினப் படுகொலையின் 15வது ஆண்டில் இனப்படுகொலையின் அரசியல்

# பலஸ்தீனமும் முள்ளிவாய்க்காலும்

**அருட்தந்தை எழில் அவர்கள் கடந்த புதன்கிழமை திருகோணமலையில் இடம் பெற்ற நிகழ்வில் ஆற்றிய உரையினை இலக்கு மின்னிதழில் பாகங்களாக வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

**பாகம் 1**

— எழில்

தமிழினப் படுகொலையின் 15ஆவது ஆண்டில், பலஸ்தீனப் படுகொலை, நாங்கள் யாவரும் சாட்சிகளாய் பார்த்திருக்க அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. இஸ்ராயேல் - பலஸ்தீன போரை வெறும் இஸ்ராயேல்-பலஸ்தீன போராக மட்டுமே அவதானிக்க முடியாதென்பதை எல்லோருமே அறிந்திருக்கின்றோம். எனது ஆய்வு நோக்கம் கருதி இப் போரை மத்திய கிழக்கில் பேரரசு கட்டமைப்புக்கான, புவிசார் அரசியல் தளத்தில் அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்ற பலப்பரீட்சைக்கான போராகவே நான் பார்க்க விரும்புகின்றேன்.



இந்த பலப்பரீட்சையில் ஏகாதிபத்திய வல்லதிகாரப் பலம் மத்திய கிழக்கில் நிலை நாட்டப்படும். ஏகாதிபத்திய பேரரசு வல்லா திக்க போட்டியில், உப ஏகாதிபத்திய வல்லாதிக்க நிலைநாட்டுதல் தவிர்க்கப்பட முடியாததான அபத்தத்தை தோற்றுவிக்கின்றது. தமிழினப்படுகொலையும், தற்போது அரங் கேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் பலஸ்தீனப் படுகொலையும், மக்களின் உயிர்களை பலி யெடுத்தும் ஏகாதிபத்திய பேரரசுக் கட்டமைப்புக்கு தயாராகும் ஓர் அரசியல்- இராணுவ கட்டமைப்பை அம்பலப்படுத்துவது மாத்திரம் அல்ல, இவ்வாறான பலப்பரீட்சையில் மக்களின் உயிர்கள் ஒரு பொருட்டே அல்ல என்பதோடு, புவிசார் அரசியல் நலன்களுக்காக வல்லாதிக்கப் பேரரசு எவ்வுயரிய விலையையும் கொடுக்கத் தயாராய் இருப்பதை சுட்டிக்காட்டுகின்றது.



தமிழினப்படுகொலை அரசியல் வரலாற்றுப் பின்புலத்திலும், தற்போது நடந்தேறிக் கொண்டிருக்கும் பலஸ்தீன இனப்படுகொலை அரசியல் வரலாற்றுப் பின்புலத்திலும் ஏகாதிபத்திய பேரரசுக் கட்டமைப்பு ஒன்றாகவே இருப்பதால், இரண்டு இனப்படுகொலைகளுக்கும் இடையே, இனங்களின் இருப்பை அழிக்கும் உத்திகள் தொடர்பில் ஒற்றுமைத் தன்னை இருப்பதை அவதானிக்க முடிகின்றது. தமிழினப் படுகொலை, பலஸ்தீனப் படுகொலை தொடர்பான ஒப்பீட்டு ஆய்வுகள் மைய நீரோட்ட ஆய்வுப் பரப்பில் செல்வாக்குச் செலுத்த முடியாவிட்டாலும், ஆய்வுப்பரப்பு வெளியை திறந்து விட்டிருப்பது என்பது மனநிறைவு தருவதாய் உள்ளது.

இவ்விரண்டு இனப்படுகொலைகளின்மூல காரணியாய் இருப்பது காலணித்துவம். காலணித் துவ அரசியல் கட்டமைப்பு நிலத்தையும், மக்களையும் இனவாத மையப்படுத்திய இயங்கு நெறிக்குள் காலணித்துவ, பின்காலணித்துவ அரசியல் வரலாற்றுச் சூழலை நிர்ப்பந்தித்தது. அதுவே நாளடைவில் வரையறுக்கப்பட்ட நிய தியாக்கப்பட்டது.

இவ்விரண்டு இனப்படுகொலைகளிலும் பிரித்தானிய காலணித்துவத்தின் பங்கு மிக குறிப்பிடத்தக்கது மாத்திரமல்ல முக்கியத்துவம் வாய்ந்ததும் கூட. இது தொடர்பில் பேராசியர் சுஜித் சேவியரின் ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை. அவர் குறிப்பிடுகின்ற அல்லது அறிமுகப்படுத்துகின்ற இன-நிற முதலாளித்துவம்என்ற கருத்தியலின் காரணியாக்க வகிபாகம் முக்கியமானது. இன வாதம், முதலாளித்துவம், வன்முறை இவற்றுக்கி டையிலான தொடர்பு புறக்கணிக்கப்பட முடியா தது.



அதே நேரத்தில் சர்வதேச சட்டம் மறை முகமான இனவாத ஏற்றத்தாழ்வை, குறிப்பாக வெள்ளைத்தோல் மீயுயர்வை தக்கவைத் துக் கொண்டே இருக்கும். அவர் குறிப் பிடுகின்ற காலணித்துவத்திற்கும் வன்முறை வரலாற்றிற்குமான தொடர்பு இன-நிற முத லாளித்துவ வில்லைகளுக்கூடாக ஆய்வுக்குட் படுத்தப்படுகின்றது. இந்த ஆய்வு சர்வதேச சட்டங்களின்உள்நோக்கத்தையும்அதுஉருவாக்கும் கட்டமைப்பையும் சிக்கலுக்குட்படுத்துகின்றது.

இன்னொரு சாரார் பிரித்தானிய புவிசார் அரசியல் நலன்களுக்காக உருவாக்கப்பட்ட அரசியல் ஒற்றையாட்சி அரச கட்டமைப்பை தமிழினப்படுகொலைக்கான காரணியாக்கி அதை கேள்விக்குட்படுத்துகின்றனர். மேற்கூறப் பட்டவை தமிழினப் படுகொலையின் அரங் கேற்றத்தில் பல்வேறு காரணிகள், உள்ளக, வெளியக சக்திகள் செல்வாக்குச் செலுத்தின என்பதைஅம்பலப்படுத்துகின்றது.

அதேபோல் தற்போது அரங்கேற்றப் பட்டுக்கொண்டிருக்கும் பலஸ்தீன இனப்படு கொலையில் எவ்வாறு பல்வேறு சக்திகள் ஈடுபட்டுள்ளன என்பதை, ஏகாதிபத்திய வல் லாதிக்கம் கட்டமைத்த சட்டகமே அம்பலப் படுத்துகின்றது என்பது கேலிக்குரியது. இந்த அதிகாரப் போட்டியில் பல்வேறு முகத் திரைகள் கிழிக்கப்படுவது, தமிழினப் படுகொலை யின் சூத்திரதாரிகளின் முகத்திரைகளையும் கிழிக் கின்றது என்பது ஐயமுற வெளிப்படுத் தப்படுகின்றது. பின்-காலணித்து வவரலாற்றுச் சூழலில் உருவாக்கப்பட்ட அரச வடிவ கட்ட மைப்புக்கும், அரங்கேற்றப்பட்ட, பட்டுக்கொண்டி ருக்கும் இனப்படுகொலை களுக்கும், காலணித் துவத்திற்கும், ஏகாதிபத்திய வல்லரசுக் கட்ட மைப்புக்கும், இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதை அவதானிக்க முடிகின்றது.



மேற்குறிப்பிட்ட இரண்டு இனப்படு கொலைகளுக்குமான புவிசார் வெளி என்பது தெளிவாக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. கடலை அண்மித்த வெளி. முள்ளிவாய்க்கால், காசா இவை இரண்டுமே கடலை அண்மித்த புவிசார் வெளியை கொண்டுள்ளது. இதனூ டாக மக்கள் ஓரங்கட்டப்பட்ட விதம் முக்கிய மானது. வைத்தியசாலைகள் இரண்டு இனப்படு கொலைகளிலுமே தாக்குதல்களுக் குள்ளாகின, மனித நேயப்பணிகள் முடக்கப்பட்டன, உணவை ஆயுதமாக்கி பட்டினிச்சாவின் விளிம்பு வரைக்கும், போர் வலயத்திற்கு உட்பட்டோர் நிர்ப்பந்திக்கபட்டனர்.



மனித உரிமை காவலர்கள் என்று கூறிக் கொள்ளும் வல்லாதிக்க நாடுகளின் இனப்படு கொலை உடந்தைத்தன்மை. இனப்படுகொலை குற்றப்பொறுப்பில் உடந்தைத்தன்மை என்பது குற்றத்தில் பங்குகொள்ளுதலாக கணிக்கப்படு கின்றது. இனப்படுகொலை குற்றத்திற்கு உடந்தை யான ஆனால் நேரடியாக தங்கள் கைகள் இரத்தம் தோயவில்லை என்று தப்பித்துக் கொள்ளும் மனித உரிமைக் காவல் நாடுகள், தங்களையும் காப்பாற்றிக்கொண்டு, இனப்படுகொலை குற்றத் தில் நேரடியாக ஈடுபட்டவர்களையும் காப்பாற்றிக் கொள்ளல் என்பது தண்டனை விலக்கீட்டுத் தன்மைக் கலாச்சாரத்திற்கு வலுச்சேர்க்கின்றது.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# மலையகப் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம்

துரைசாமி நடராஜா

மலையகப் பெண்கள் சகல துறைகளிலும் கால்பதித்து ஏனையோருக்கு எடுத்துக் காட்டாக விளங்க வேண்டும் என்ற எதிர் பார்ப்புகள் மேலோங்கி வருகின்றன. இவற்றுள் அரசியல் துறை குறித்த எதிர்பார்ப்பும் மிகவும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. மலையகப் பெண்கள் அரசியலில் கோலோச்சுவதன் ஊடாக சமூக மேம்பாட்டுக்கு வித்திட முடியும் என்பதோடு பெண்களின் எழுச்சிக்கும் அது வாய்ப்பாக அமையும் என்றும் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றமையும் தெரிந்ததாகும். இதனிடையே பொதுவாகவே இலங்கை அரசியலில் பெண்களின் வகிபாகம் வலுப்பெற வேண்டியதன் அவசியத்தை இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் போனி ஹார்பாக் அண்மையில் வலியுறுத்தி இருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



பெண்கள் சமூகத்தின் கண்கள் என்பார்கள். எனினும் சமூகத்தில், நாட்டில் பெண்களுக்கு உரிய இடமளிக்கப்பட்டு அவர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படுகின்றனவா என்று வினவுகையில் திருப்தியற்ற வெளிப்பாடுகளே மேலோங்கி காணப்படுகின்றன. பெண்கள் வாக்குரிமையை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அரசியலில் உள்நுழைதல் என்பன தொடர்ச்சியாகவே சவாலாகவே இருந்து வந்துள்ளது. 19 ம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்தே உலகின் பல நாடுகளில் பெண்கள் தமது அரசியல் உரிமைகளுக்காக பல்வேறு போராட்டங்களிலும் ஈடுபட்டு வந்துள்ளனர். இப்போராட்டங்களின் விளைவாக 1869 இல் ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தில் பயோமின் மாநிலத்தில் பெண்கள் தமது வாக்குரிமையை வென்றெடுத்தனர். இதனைத் தொடர்ந்து 1893 இல் நியூசிலாந்து பெண்களும், 1921 இல் இந்தியாவில் சென்னை மாநிலத்தில் உள்ள பெண்களும் தமது வாக்குரிமையை வென்றெடுத்தனர் என்பதும் தெரிந்ததேயாகும்.

### டொனமூரின் முன்னெடுப்பு

இலங்கையில் பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்கில் அவ்வப்போது அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வந்துள்ளன. 20ம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தத்தில் பெண்கள் குறித்த பல சஞ்சிகைகள் வெளிவந்ததனை அறிந்து கொள்ள முடிகின்றது. 1931 இல் பியசீலி குசுமாவதி என்பவரால் 'வனிதா' சஞ்சிகை ஆரம்பிக்கப் பட்டது. அறிஞர்களின் பேனைகளினாலும், அறிஞரல்லாதோரின் கத்திகளினாலும் பாதிப்பிற்கு உள்ளான பெண்களுக்கான விடுதலையைப் பெற்றுக் கொள்வதையே தமது இலக்காக வனிதா சஞ்சிகை கொண்டிருந்தது.

1919 மற்றும் 1925ம் ஆண்டுகளில் இடம் பெற்ற பெண்கள் சங்கத்தின் தேசிய மகா நாட்டின்போது பெண்களுக்கு உடனடியாக



வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கப்பட்டது. இதனிடையே பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படக்கூடாது என்ற எதிர்ப்புக் குரல்களும் அதிகமாக காணப்பட்டன. இவற்றுக்கும் மத்தியில் ஏ.ஈ.குணசிங்க, ஜோர்ஜ் ஈ.டி.சில்வா, காலியைச் சேர்ந்த எஸ்.தஹநாயக்க, சீ.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா, யாழ்ப்பாண வாலிபர் சங்கம், கொழும்பு இளைஞர் சங்கம், பிரித்தானிய இனத்தவரான எச்.ஆர்.பிரீமன் போன்றோர் பெண்களுக்கான வாக்குரிமையை ஆதரித்து குரல் கொடுத்திருந்தனர்.

1927 இல் இலங்கைக்கு வந்த டொனமூர் ஆணைக்குழு இனரீதியான பிரதிநிதித்துவத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. 'நாட்டில் நிலையான அக்கறை உடையோர் அல்லது நாட்டில் நிலையாக வசிப்போர் ஆகியோருக்கே வாக்குரிமை ' என்று கூறியதோடு 21 வயதுக்கு மேற்பட்டோருக்கு இவ்வுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் சிபாரிசு செய்திருந்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தில் முதன் முதலாக தொழிலாள வர்க்கத்திற்கும், பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கியமை முக்கிய விளைவுகளுக்கு வித்திட்டது. பெண்களுக்கும், இந்தியத் தொழிலாளருக்கும் வாக்களிக்கும் உரிமை பற்றிய பிரச்சினை 1928 இல் மிகுந்த வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தி இருந்தது. டொனமூர் ஆணைக்குழுவினுடைய சிபாரிசில் அபாய அறிவித்தலாக அமைந்தது இந்தியத் தொழிலாளருக்கு வாக்குரிமையளிக்கும் பிரேரணை என்று டி.எஸ்.சேனநாயக்கா தெரிவித்திருந்தார். பல எதிர்ப்புகளுக்கும் மத்தியில் டொனமூர் ஆணையத்தை பிரதிநிதித்துவப் படுத்திய பிரிட்டிஷ் தொழிலாளர் கட்சியின் உறுப்பினர் டிரம்மன் பிலிப் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்குவது பொருத்தமானதே என்றுரைத்தார்.



வாக்குரிமையை பெற்றுக் கொண்ட போதும் பெண்கள் அரசியலில் உள்நுழைவதென்பது அவ்வளவு இலகுவான காரியமாக இருக்கவில்லை. பெண்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது என்ற கருத்து ஆதிகாலத்தில் இருந்தே நிலவிவந்த ஒன்றாகும். பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றவர்களின் சில கூற்றுக்களும், பண்டைய இந்திய வரலாறும் இதனை

உறுதிப்படுத்துவதாக புத்திஜீவிகள் சுட்டிக்காட்டியுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கதாகும். குடும்பம் மற்றும் சமூகத்தின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலேயே பெண்கள் அரசியலில் உள் நுழைய வேண்டிய நிலை காணப்பட்டது. இதனடிப்படையில் இலங்கையில் 1931ம் ஆண்டு பாராளுமன்றத்துக்குச் சென்ற முதலாவது பெண்மணி என்ற பெருமை திருமதி எட்லின் மொலமுரேயைச் சாருகின்றது.

இவர் 1931ம் ஆண்டு ருவன்வெல்ல ஆசனத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஜே.எச். மீதெனியவின் மகளாவார். இதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் பெண்கள் பிரதிநிதித்துவம் படிப்படியாக உள்நுழைந்தது. 1989 இல் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து 08 பெண்களும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து 04 பெண்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதேவேளை உலகில் முதலாவது பெண் பிரதமராக ஸ்ரீமாவோ ஆர். டி.பண்டாரநாயக்க விளங்குகின்றார். 'பிரதமர் பதவி போன்ற மிகப் பொறுப்புள்ள பதவியானது ஆண் ஒருவராலேயே வகிக்கப்பட வேண்டும். இப்பொறுப்பை ஒரு பெண்ணின் மீது சுமத்துவது நாட்டை அழிவை நோக்கித் தள்ளுவதற்கு வகைசெய்வதற்கு சமனாகும் ' என்று 1960 மே மாதம் 09 ம் திகதி கொழும்பில் இருந்து வெளியான சிலுமின பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் வலியுறுத்தியது.



எனினும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க நாட்டின் பிரதமராக இருந்து பல்வேறு சாதனைகளை நிகழ்த்திக் காட்டினார். இதுபோன்றே ஸ்ரீமாவின் புதல்வி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக பதவியேற்று நாட்டின் அபிவிருத்திக்கு வலு சேர்த்திருந்தார். பெற்றோரிடமிருந்து பல்வேறு அனுபவங்களையும் பெற்றுக் கொண்டிருந்த இவர்,1984 இல் கணவரான விஜயகுமாரணதுங்க ஸ்ரீ லங்கா மஹஜன கட்சியை நிறுவுவதற்கு தோள்கொடுத்தார். மேலும் 1991 இல் மேல் மாகாண சபை முதலமைச்சராகவும்,1994 இல் சிறிதுகாலம் பிரதம மந்திரியாகவும் சந்திரிகா இருந்துள்ளார்.பின்னர் இரண்டு தடவைகள் நாட்டின் ஜனாதிபதியாக பதவிவகித்த பெருமையும் அவருக்குள்ளது.நாட்டின் ஐக்கியத்துக்கும் ஒருமைப்பாட்டிற்கும் குந்தகம் ஏற்படாது, நாட்டின் அபிவிருத்திக்கு ஏதுவாக 13 ஆவது திருத்தச் சட்டமே நல்லதொரு தீர்வாகுமென்று சந்திரிகா கருதினார்.

### தூதுவர் போனி ஹார்பாக்

எவ்வாறெனினும் சமகாலத்தில் இலங்கை

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

## அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
## அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2024

**பேச்சு 2012 ஆம் ஆண்டு பிறந்த மாணவர்கள்**

வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவரர்கள்.

### அன்னை பூபதி

மீன்பாடும் தேன் நாடாம் மட்டு நகரின் ஆரையம்பதியிலே அன்னை பூபதி பிறந்தார். மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணியின் தீவிர செயற்பாட்டாளராகச் செயற்பட்டு வந்தார்.

இந்தியப்படைகள் தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை அழித்தொழிக்கும் வன்முறையில் இறங்கியது. அப்போது இந்தியப்படை உடனடியாகப் போரை நிறுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இதனை வலியுறுத்தி, அன்னை பூபதி அவர்கள் 19.03.1988 அன்று தனது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

ஆனால், இந்திய அரசு அன்னையின் சாத்வீகப் போராட்டத்தைக் கவனத்தில் கொள்ளவில்லை. அவரின் கோரிக்கைகளையும் செவிசாய்க்கவில்லை. மாறாக இந்தியப்படைகள் தமிழர் நிலப்பரப்பை சுடுகாடாக்கியது. இறுதியில், காந்தி தேசம் 19.04.1998 அன்று அன்னையின் உயிரைப் பறித்தது.

அன்னை, தமிழ் இனத்தின் விடிவுக்காகவும், இராணுவத்திற்கு எதிராகவும், உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடாத்திய பெருமைக்குரியவர். ஒரு குடும்பப்பெண் தனது வாழ்வைத் துறந்து, தனது இனத்திற்காக முன்னெடுத்த உண்ணாவிரதப் போராட்டம் என்று கூறின் மிகையாகாது! குடும்பத் தலைவியான இவர், தன்னை தன் மக்களுக்காக தற்கொடையாக்கிய செயல், ஒரு வரலாற்று நிகழ்வு.

எம் சுதந்திர வாழ்விற்காக தன்வாழ்வைச் சுருக்கிக்கொண்ட அன்னையின் தியாகம் நாட்டுப்பற்றாளர் தினம் என்று, தமிழீழத் தேசியத் தலைமையினால் பிரகடனப்படுத்தப்பட்டது.

தமிழினம் வாழத் தன் இன்னுயிர் ஈந்த அன்னையின் பெயரால், நோர்வேயில் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் கிளைபரப்பி, பெருவிருட்சமாக வளர்ந்து நிற்கின்றது. இத் தமிழ்க்கலைக்கூடம் மொழி, கலை, தேசப்பற்று, விளையாட்டென அனைத்தையும் வழங்கிடும் கற்பகதருவாக விளங்குகின்றது. அன்னையின் தியாகம் எம் மனதை விட்டு என்றுமே அகலாது.













# ஹிஸ்பொல்லாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே அடுத்து நடக்கப் போவது என்ன?

பகுதி 1

தமிழில்: ஜெயந்திரன்

**பெய்ரூத், லெபனான்**

காஸாவிலிருந்து தமது துருப்புகளை தற்காலிகமாக மீள அழைப்பதாக இஸ்ரேல் அண்மையில் அறிவித்திருக்கிறது. இஸ்ரேலின் வடபகுதியில் லெபனானில் இருக்கின்ற ஷியா முஸ்லீம்பிரிவைச்சேர்ந்தஆயுதக்குழுவும்அரசியல் சக்தியுமான ஹிஸ்பொல்லா அமைப்புக்கு எதிரான தாக்குதல்களை இஸ்ரேல் தீவிரப்படுத்தலாம் என்று தற்போது ஊகிக்கப்படுகிறது.

ஹிஸ்பொல்லா அமைப்பிடமிருந்து இது வரை தம்மைப் பாதுகாத்து வந்த இஸ்ரேல் படைகள், இனிமேல் அந்த அமைப்புக்கு எதிரான வலிந்த தாக்குதலை மேற்கொள்ளுவதற்குத் தம்மைத் தயார்செய்து வருவதாக இஸ்ரேலிய இராணுவம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட தமது செய்திக்குறிப்பில் குறிப்பிட்டிருந்தனர்.



இயங்கு நிலையில் உள்ள துருப்புகளினதும் இருப்புநிலைத்துருப்புகளினதும் கட்டளை அதிகாரிகள், தேவைப்படும் அனைத்து துருப்பு களையும் அழைத்து, ஒரு சில மணித்தியாலங்களில் அவர்களுக்குத் தேவையான உபகரணங்களைக் கொடுத்து, பாதுகாப்பு மற்றும் வலிந்து தாக்குதல் செயற்பாடுகளுக்காக அவர்களை முன்னணி நிலைகளுக்கு அனுப்புவதற்கு ஆயத்தமாக இருக் கிறார்கள் என்று அந்த செய்தி மேலும் தெரிவித்தது.

ஹமாஸ் மேற்கொண்ட திடீர் தாக்கு தலுக்குப் பின்னரும் அதற்குப் பழிவாங்க ஒக்ரோபர் 8ம் திகதியிலிருந்து காஸாத் துண்டின் மீது இஸ்ரேல் ஆரம்பித்த மோசமான பழிவாங்கும் தாக்குதலைத் தொடர்ந்து, லெபனான் இஸ்ரேல் எல்லையில் ஹிஸ்பொல்லா மற்றும் இஸ்ரேல் இராணுவத்தினர் ஆகியோர் தங்களுக்கு இடையே தொடர் தாக்குதல்களை மேற்கொண்டு வந்திருக் கின்றனர்.

இவ்வாறான தாக்குதல்கள் தொடங்கப் பட்டதிலிருந்து, இஸ்ரேல் மேற்கொண்ட தாக்கு தல்களின் காரணமாக 66 அப்பாவிப் பொது மக்கள் உட்பட 330 லெபனானியர்கள் கொல்லப் பட்டுள்ளனர். 12 இராணுவ வீரர்கள், 6 பொதுமக்கள் என 18 பேர் இஸ்ரேல் மீதான ஹிஸ்பொல்லாவின் தாக்குதலில் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

எல்லையின் இருபுறத்திலுமிருந்து பொது மக்கள் அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றனர். தனது வடக்குப் பகுதியிலிருந்து இஸ்ரேல் பொது மக்களை அப்புறப்படுத்தியிருக்கும் அதே நேரம், பல்லாயிரக்கணக்கான லெபனான் மக்கள் தென்பகுதியை நோக்கி இடம்பெயர்ந்திருக்கின்ற னர்.

காஸா யுத்தம் தனது ஏழாவது மாதத்தை அண்மித்திருக்கும் இத்தருணத்தில், போரில் புதிய திருப்பம் ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது. ஆனால் அந்த புதிய திருப்பம் என்னவென்பது தான் தற்போது கேள்வியாக இருக்கிறது.

**வடபகுதியில் இஸ்ரேலின் இலக்கு என்ன?**

ஈரானின் ஆதரவுடனும் அதன் நிதியுதவியுடனும் இயங்கும் ஹிஸ்பொல்லாவின் பிரசன்னம் எல்லையில் இருக்கும் வரைக்கும், தமது வீடுகளுக்குப் பாதுகாப்பாகச் செல்ல முடியாது என்று இஸ்ரேல் மக்கள் பொதுவாக நம்புகின்றனர்.

பெப்பிரவரி மாதத்தில் இஸ்ரேலிய பத்திரிகை ஒன்று நடத்திய கருத்துக்கணிப்பின்படி, ஹிஸ்பொல்லாவுக்கு எதிரான பெரிய அளவி லான இராணுவ முன்னெடுப்புகளை 70 வீதமான இஸ்ரேலிய மக்கள் ஆதரிப்பதாக சொல்லப் படுகிறது.

"ஒக்ரோபர் மாதம் 7ம் திகதி ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலுக்குப் பின்னர், வட போர்முனைப் பக்கம் தான் திரும்புவேன் என்றும் அது முடிந்ததும் மத்திய கிழக்கை தான் மாற்றி அமைத்திருப்பேன்" என்றும் இஸ்ரேலிய பிரதம மந்திரியான பெஞ்சமின் நெத்தன்யாகு தெளிவாகத் தெரிவித்திருந்தார்" என்று பெய்ரூட்டிலுள்ள அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானப் பேராசிரியராக இருக்கின்ற ஹிலால் கஷான் தெரிவித்தார். "எமது குடிமக்களுக் கான பாதுகாப்பை உறுதிப்படுத்தி, வடபிரதே சத்தில் மீண்டும் அமைதியை ஏற்படுத்தி, லெப னானுடனான எமது எல்லையில் அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்துவோம்" என்று நெத்தன்யாகு பேசியதாக ஐ24 என்ற இஸ்ரேலிய செய்தித்தாபனம் செய்தி வெளியிட்டிருந்தது.



"ஈரானுக்கும் அதன் நட்பு நாடுகளுக்கும் எதிராக ஒரு நீண்ட போரை முன்னெடுப்பதற்கு இஸ்ரேல் தயாராகி வருவதாகவும் எந்தக்கணமும் போர் மூண்டு முழுப் பிரதேசத்துக்கும் அழிவை ஏற்படுத்தலாம்" என்று பாதுகாப்பு ஆய்வாளரும், மேனாள் லெபனான் இராணுவ பிரிகேடிய ஜெனரலுமானதன்னூஸ் மோஆவாட் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் லெபனான் மீது இஸ்ரேல் மேற்கொண்ட மோசமான தாக்குதல் களை இன்னும் அந்த மக்கள் மறந்துவிடாத ஒரு பின்புலத்தில், போர் மூளலாம் என்று லெபனான் மக்கள் அதிகளவில் நம்புகின்றனர். கடைசியாக 2006ம் ஆண்டு லெபனான் மீது இஸ்ரேல் போர் தொடுத்திருந்தது.

**லெபனானில் ஹிஸ்பொல்லாவின் பலம்**

லெபனானின் தென்பகுதியில் ஹிஸ்பொல்லா பலமாக இருக்கிறது. அங்கே அதற்கு மக்கள் மத்தியில் அதிக ஆதரவு இருப்பதுடன், அங்கிருந்து தான் அதிகமான போராளிகளை அந்த அமைப்பு உள்வாங்கிக்கொள்கிறது. அவர்களை அங்கிருந்து அகற்றுவது என்பது கடினமான ஒரு செயற்பாடாகவே இருக்கும்.

இன்றைய லெபனானின் பலம் வாய்ந்த அரசியல் மற்றும் இராணுவ சக்தியாக ஹிஸ் பொல்லாவே திகழ்கிறது. 1990ம் ஆண்டு முடிவுக்கு வந்த லெபனானின் உள்நாட்டு யுத்தம் முடிந்ததன் பின்னர் இருக்கம் ஒரேயொரு ஆயுதக்குழு ஹிஸ்பொல்லா மட்டுமே. இஸ்ரேலின் ஆக்கிர மிப்பை எதிர்ப்பதே. அதன் முக்கிய நோக்கமாக இருந்தது.

காஸாவில் இஸ்ரேல் மூர்க்கத்தனமான தாக்குதலை மேற்கொண்டுவருகிறது. ஆனால் லெபனானைப் பொறுத்தவரையில் இஸ்ரேல் தனது தாக்குதல்களை மிகவும் கவனமாகவே மேற்கொண்டுவருகிறது. ஆனால் தொடர்ந்தும் அப்படி கவனமாக இருக்குமா என்பது கேள்விக் குறியே.

இவ்வாறான ஒரு மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களின் நடுவிலும், கட்டளை அதிகாரி கள் மற்றும் சண்டைவீரர்களின் இழப்பு ஹிஸ்பொல்லாவுக்கு அதிகமான பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாகவே சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஹிஸ்பொல்லாவின் நகர்வுகள் தற்போது சற்று முடங்கிப்போயிருக்கின்றன. தமக்கும் இஸ்ரேலுக்கும் இடையேயான இடைவெளியை அவர்கள் சரியாகப் புரிந்திருக்கவில்லை. இந்த இடைவெளி தற்போது எந்தவிதத்திலும் நிரப்ப முடியாததாகும்.

உயர்தொழில்நுட்பத்துடன்ஹிஸ்பொல்லா மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் ஹிஸ்பொல்லாவின் களத்தலைமைகளைப் பதம் பார்த்துவருகிறது.



ஹிஸ்பொல்லாவின் ரொக்கெட் மற்றும் ஏவுகணைப் பிரிவின் துணைக் கட்டளை அதி காரியான அலி அபெட் அக்சான் நயீம், மற்றும் ஹிஸ்பொல்லாவின் விசேட தாக்குதல் பிரிவில் முக்கியமானவர்களான விஸாம் அல் தாவில், அலி அஹ்மெட் ஹ_செய்ன் ஆகியோர் கொல லப்பட்டவர்களில் முக்கியமானவர்கள் ஆவர். ஹமாசின் ஒரு உயர் அதிகாரியான சாலே அல் அரூரி என்பவரை ஆளில்லா விமானத் தாக்குதல் மூலம் கொன்றதாக இஸ்ரேலை ஹிஸ்பொல்லா குற்றம் சாட்டியது.

இவ்வாறான இழப்புகளுக்குப் பின்னரும் ஹிஸ்பொல்லா அடிபணிய மறுக்கிறது.

ஹிஸ்பொல்லாவின் எதிர்ப்பு அணி தமது

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

உரிமைகளும் ... தொடர்ச்சி ...



அரசியலில் பெண்களின் வகிபாகம் திருப்தி கரமானதாக இல்லை. இதனையே நெதர்லாந்து தூதுவர் போனி ஹார்பாக்கும் அண்மையில் வலியுறுத்தி இருக்கின்றார். 'இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்றபோதிலும் அரசியலில் பெண்களின்வகிபாகம்மிகக்குறைந்தளவிலேயே உள்ளது. இந்த நிலைமை வெகுவிரைவில் மாற்றமடைய வேண்டும். உலகளவில் மக்கள் மத்தியில் செல்வாக்கு செலுத்தும் சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்தும் முகமாக புதிய சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன. என்றாலும் கூட சட்டங்கள் மக்களின் கருத்து சுதந்திரத்திற்கு இடையூறாகி விடக்கூடாது. ஜனநாயக நாடொன்றில் மக்களின் கருத்து சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டியது கட்டாய மாகும். இலங்கையை பொறுத்தமட்டில் வலு வாக ஜனநாயகக் கொள்கை காணப் படுகின்றபோதிலும் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் வலுப்பெற வேண்டிய தேவை அதிகளவில் உள்ளது' என்று தூதுவர் போனி ஹார்பாக் தெரிவித்துள்ளார்.



இலங்கை அரசியலில் பெண்களின் வகி பாகம் குறைவாகவே உள்ள நிலையில் அதிலும் மலையக பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் என்பது மிகவும் குறைந்தளவிலேயே காணப் படுகின்றது. மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்கள் ஓரளவு வகிபாகத்தைக் கொண்டுள்ளபோதும் பாராளுமன்றத்தில் இவர் களின் பிரதிநிதித்துவம் பூச்சியமாக உள்ளது. இது பல்வேறு பாதக விளைவுகளுக்கும் வித்திடுவதாக உள்ளது. மலையகப் பெண்களில் பலர் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமின்றி முடங்கிக் கிடக்கின்றனர். ஆணாதிக்க சமூகத்தின் மேலோங்குகைக்குள் அகப்பட்டு உரிமைகள் பலவற்றையும் இழந்த நிலையில் பல பெண்கள் துயர வாழ்க்கை வாழ்வதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.




தீர்மானம் மேற்கொள்ளும் இடங்களில் பெண்கள் தொடர்பான தீர்மானங்களை ஆண் களே மேற்கொள்வதன் காரணமாக பெண்களின் குரல்கள் மழுங்கடிக்கப்பட்டு அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் மூடி மறைக் கப்படுகின்றன. இது விரும்பத்தக்கதல்ல.பெண் களின் குரல்கள் நாற்றிசையும் எதிரொலிக்க வேண்டிய நிலையில் இதனூடாக அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படுதல் வேண்டும். இது அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதாக அமையும்.

இதனிடையே மலையக பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டி யதன் அவசியம் குறித்து பேராதனைப் பல்கலைக்கழக பொருளியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர்.சோபனாதேவி பல கருத்துக்களையும் முன்வைத்துள்ளார். 'பெண்க ளின் வகிபாகம் அதிகமுள்ள நாடுகளில் பொருளாதார முன்னேற்றம் காணப்படுகின்றது. இலஞ்சம் மற்றும் ஊழல்கள் குறைவ டைந்துள்ளன. குடும்பம் மற்றும் நாடளாவிய ரீதியில்துஷ்பிரயோகங்கள்குறைவடைந்துள்ளன என்பது ஆய்வுகளின் முடிவாகும்.சர்வதேச ரீதியில் நோக்குகையில் ருவாண்டாவில் பெண் களின் அரசியல்துறை பங்களிப்பு நூற்றுக்கு 60 வீதமாகவுள்ளது சிறப்பம்சமாகும்.இந்தியாவின் கேரளா மாநிலத்தில் பெண்களின் அரசியல் பங்களிப்பு சிறப்பாகவுள்ளதோடு பெண்களின் தலைமைத்துவமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தியடைந்துள்ள நிலையில் இதற்கு பெண்கள் முன்னின்று உழைத்துள்ளனர். வெளிப்படைத்தன்மையும் அதிகரித்துள்ளது.

### 53 வீதத்தினர் பெண்கள்

இலங்கையில் அரசியல், சமூக, பொருளாதார நெருக்கடி நிலவுகின்றது.கொவிட் நிலைமை யானது இதனை மேலும் அதிகப்படுத்தியுள்ளது. உட்கட்டமைப்பு வசதிகள் பின்னடைந் துள்ள நிலையில் பெருந் தோட்டப் பெண்கள் இதனால் அதிகரித்த பாதிப்பினை எதிர் கொண்டுள்ளனர். இந் நிலையில் அரசியல், சமூக, பொருளாதார மேம்பாடு எட்டப்படும் நிலையில் நாடு முன் னேற்றம் காணும். இந்த நிலையை அடைவத ற்கு பெண் களின் அரசியல் வகிபாகம் அதிகரிக்கப்பட வேண்டும். தீர்மானம் மேற் கொள்ளும் ஆளுமை விருத்தி செய்யப்பட்டு, தீர்மானம் மேற்கொள்ளும் இடங்களில் பெண்கள் உள்ளீர்க்கப்பட வேண்டும். இதனால் பெண்களின் சக்தி அதிகரிப்பதோடு இலஞ்சம் மற்றும் ஊழல்களுக்கும் முற்றுப்புள்ளி வைக் கப்படும். இலங்கையில் 53 வீதத்தினர் பெண் களாகவுள்ளனர்.

இவர்களை சரிவர பயன்படுத்தாவிட்டால் அபிவிருத்தி உள்ளிட்ட சகல விடயங்களும் கானல் நீராகிவிடும். பெண்களின் குரல் மேலோங்கி அரசியல் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படுமிடத்து அது பெண்களுக்கு மாத்திரமன்றி அப்பெண்கள்சார் சமூக மேம் பாட்டுக்கும் உந்துசக்தியாக அமையும் என் பதனை மறுப்பதற்கில்லை. சமூகத்தில் நேரான மாற்றம் ஏற்படவும் வாய்ப்பாகும்' என்றார். எனவே இதனை கருத்தில் கொண்டு மலையக பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவ அதிகரிப் பிற்கு சகலரும் வலுச்சேர்க்க வேண்டும்.

• • •

அரச தலைவர் ... தொடர்ச்சி ...

நீங்கள் ஆலோசனை வழங்க போவதில்லையா?

**பதில்:**

சந்திரிக்கா அம்மணி வந்து தலைவர் மைத்திரியை விரட்டியடித்துள்ளார். தவறுகள் தற்போது திருத்திக் கொள்ளப்படுகின்றன. சுதந்திர கட்சி பல சவால்களை எதிர்கொண்டுள் ளது. சுதந்திர கட்சியை கட்டியெழுப்பும் உரிமை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கவுக்கு உண்டு.

**கேள்வி:**

குறுகிய காலத்தில் பொதுஜன பெரமுன எழுச்சிப் பெற்றதை போன்று சுதந்திர கட்சியும் எழுச்சி பெறும் என்று எதிர்பார்க்கின்றீர்களா?

**பதில்:**

நிச்சயமாக சுதந்திர கட்சி மீண்டும் எழுச்சி பெறும்.

**கேள்வி:**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது ஜன பெரமுனவுடன் இணக்கமாக செயற் படுகிறாரா ?

**பதில்:**

இணக்கமாக செயற்படும் வரை இணைந்து பயணிப்போம் முடியாவிடின் விலகி விடுவோம்.

**கேள்வி:**

பொதுஜன பெரமுனவின் உறுப்பினரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க போவ தில்லை என ஆளும் தரப்பின் உறுப்பினர் அமைச் சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிடுகிறாரே?

**பதில்:**

அது அவரது தனிப்பட்ட நிலைப்பாடு. கட்சியின் உறுப்பினரை ஜனாதிபதி வேட்பா ளராக களமிறக்குவோம்.

உக்ரைனில் ... தொடர்ச்சி ...

என சென்ரோ நெர்கோ என்ற நிறுவனத்தின் தலைவர் அட்றியா ஹொட்டா தெரிவித்துள்ளார்.

வியாழக்கிழமைகாலைரஸ்யாவின்கனரக குண்டு வீச்சு விமானங்கள் பல ஏவுகணைகளை அந்த நிலையத்தின் மீது ஏவியதால் தலைநகரில் இருந்து 50 கி.மீ தொலைவில் இருந்த அந்த நிலையம் தீப்பற்றி முற்றாக எரிந்துள்ளது. ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் முதலில் அந்த நிலையத்தை தாக்கிய போது அதில் இருந்த பணியாளர்கள் தப்பியோடியதால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளது.

ஒரே நாளில் 80 ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் உக்ரைன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அமெரிக்காவின் பற்றியாட் வான் பாதுகாப்பு ஏவுகணைகள் மற்றும் ஜேர்மனியின் நவீன ஏவுகணைகளை உக்ரைன் படையினர் கொண்டிருந்தபோதும் இந்த தாக்குதல்களை அவர்களால் தடுக்க முடியவில்லை என தெரி விக்கப்படுகின்றது.

### துண்டாடப்படும் ... தொடர்ச்சி ...

இதற்காக தொடர்ச்சியாக அரசியல்வாதிகள் ஊடாகவும் மதவாத சக்திகள் ஊடாகவும் தமிழர்களுக்கு எதிரான கருத்துருவாக்கம் விதைக் கப்பட்டுவருகின்றது.

உண்மையில் கல்முனையில் கல்முனை தெற்கு,கல்முனை வடக்கு பிரதேச செயலகங்கள் அமைக்கப்பட்டு கல்முனை தெற்கு பிரதேச செயலகம் முஸ்லிம்களுக்காகவும் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தமிழர்களுக்காகவும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டபோது கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினை இயங்கவி டால் செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக் கப்படுகின்றன.

கல்முனை தெற்கு பிரதேச செயலகம் என்பது கல்முனை நகரிலிருந்து சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கல்முனைக்குடி மற்றும் மூன்று கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மருதமுனை முஸ்லிம் மக்களுக்காக உருவாக்கப்பட்டது.ஆனால் கல்முனை வடக்கு பிரதேச செயலகமானது கல்முனை,பாண்டிருப்பு, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, பெரிய நீலாவனை என கல்முனையுடன் இணைந்திருக்கும் தமிழ் மக்களின் நலன் கருதி உருவாக்கப்பட்டது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்பது 17.107 சதுர கிலோமீட்டர் பரப்பளவையும் 29 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் 36346 சனத்தொகையினையும் 23217 வாக்காளர் எண் ணிக்கையும் கல்முனை, பாண்டிருப்பு, பெரிய நீலாவனை, நற்பட்டிமுனை, சேனைக்குகுடியிருப்பு மணற்சேனை ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய பிரதேச செயலகம் ஆகும். கல்முனை வடக்கு பிரதேச செயலகமானது உள்நாட்டு அமைச்சினால் 1989 ஆம் ஆண்டு உதவிய அரசாங்க அதிபர் பிரிவாக ஸ்தாபிக்கப்பட்டு 33 வருடங்களுக்கு மேலாக தனது சேவைகளை மக்களுக்கு வழங்கி வருகின்றது. அது ஸ்தாபிக்கப்படும் போது "கரைவாகு வடக்கு (தமிழ்) பிரிவு என குறிப்பிடப்பட்டது. தற்போது "கல்முனை வடக்கு" எனவும் சில இடங்களில் "கல்முனை தமிழ் பிரிவு" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது .கல்முனை வடக்கு தமிழ் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு 1989/4/6 ஆண்டுகளில் வி அழகரட்டணம், பின்னர் 1991/ 4/0 திகதி திருமதி கே.பாலசிங்கம் அவர்களும் பின்னர் திரு எஸ் அருண்ராசா அவர்களும் உதவி அரசாங்க அதிபர்களாக நியமிக்கப்பட்டனர்

இதேவேளை உள்நாட்டு அமைச்சி னால் சமர்ப்பிக்கப்பட்ட 1993/3/ 17ஆம் தேதி மற்றும் 1993/03/31-ம் தேதி அமைச்சரவை மசோதாக்களின் ஊடாக இலங்கையில் காணப்படும் சில உதவி அரசாங்கதிபர் பிரிவுகள் மற்றும் உப அலுவலகங்களை பிரதேச செயலகங்களாக மாற்றுவதற்காக முன்மொழியப்பட்டது. அதில் கல்முனை வடக்கு (தமிழ் பிரிவு பிரதேச செயலக பிரிவு)ம் அதில் உள்ளடங்கப்பட்டிருந்தது.

அமைச்சரவை உப பிரிவுகளால் சமர்ப்பிக் கப்பட்ட 1993/7/9ஆம் தேதி அறிக்கையின் அடிப் படையில் கல்முனை வடக்கு தமிழ் பிரிவு உள்ளடங்கலாக 28 பிரதேச செயலக பிரிவுகளும் தரம் உயர்த்தப்பட்டு 1993/ 7/28 ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டது. 28.07.1993 அன்று அமைச்சரவை தீர்மானத்தை நடைமுறைப்படுத்து மாறு அமைச்சரவை அலுவலகத்தினால் உள்நாட்டு அலுவலகங்கள் அமைச்சுக்கும் நிதி அமைச்சுக்கும் 1993/8/4 ஆம் தேதி கடிதம் அனுப்பப்பட்டது .அதன் அடிப்படையில் அன்றிலிருந்து இன்று வரை கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தனித்துவமான பிரதேச செயலகமாக தொழிற்பட்டு வருகின்றது.

எனினும் குறித்த பிரதேச செயலகத்திற்கு காணி அதிகாரங்கள்,நிதி அதிகாரங்கள் வழங்கு வதை தடுக்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. காரணம் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினை சூழவுள்ள தமிழர்களின் பூர்வீக காணிகளையும் தமிழர்களுக்கு சொந்தமான காணிகளையும் கபளீகரம் செய் வதற்கான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன் னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழர்கள் நூறுவீதம் பெரும்பான்மையாக வாழும் நகர் பகுதியில் சுனாமியினால் பாதிக்கப் பட்ட முஸ்லிம்களுக்கு வீட்டுத்திட்டம் என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட வீட்டு தொகுதியில் மட்டுமே கல்முனையில் முஸ்லிம் மக்கள் வசிக்கின்றனர்.இஸ்லாமாபாத் என்னும் பெயரில் கொண்டுவரப்பட்ட அந்த வீட்டுத்திட்டத்தின் பெயரைப்பாவித்து இன்று கிராம சேவையாளர் பிரிவுகள் போலியாக உருவாக்கப்பட்டு அதனை பாவித்து கல்முனை நகரில் முஸ்லிம்கள் உள்ளதாக காட்டி கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் அதிகாரங்களை பறிக்கும் செயற்பாடுகளும் தரமிறக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

தேர்தல்காலம் நெருங்கும் நேரத்தில் பேரின வாதசக்திகள் சிறுபான்மை சமூகங்களுக்கிடையே குழப்ப நிலையினை உருவாக்கி அதன் மூலம் தென்னிலங்கையில் தமது இருப்பினை தக்க வைப்பதற்கு காலத்திற்கு காலம் கிழக்கில் சிறு பான்மையினங்களை மோதவிடும் நிலைமை காணப்படுகின்றது.இன்று கிழக்கினைப்பொறுத்த வரையில் மட்டக்களப்பில் மயிலத்தமடு,மாத வனை,திருகோணமலையில்; பௌத்த விகாரை அமைக்கும் பணி,அம்பாறை மாவட்டத்தில் கல்முனை தமிழ் பிரதேச செயலகம் ஆகியவற்றின் மூலம் குழப்பங்களை ஏற்படுத்தும் செயற்பாடு களை முன்னெடுத்துவருகின்றது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்பது தமிழர்களின் உரிமை,இருப்புசார்ந்த விடயமாக காணப்படும் நிலையில் இன்று கல்முனை தமிழ் மக்கள் அதற்காக போராடிவரும் நிலையில் அதனைக்கொண்டு இனங்களிடையே முரண்பாடுகளைதோற்றுவிக்கும் செயற்பாடுகளை சிங்கள பேரினவாதம் முன்னெடுக்கின்றது. எனவே தமிழர்கள் மிகவும் கவனமாக தமது கோரிக்கையினை முன்நகர்த்திசெல்லும் நிலையில் அதற்காக கைகோர்க்கவேண்டிய பொறுப்பு வடகிழக்கில் வாழும் தமிழர்களுக்கு உள்ளது. அதனை செய்வதற்கு அனைத்து தமிழர்களும் முன்வரவேண்டும்.

• • •

### சீன துறைமுக... தொடர்ச்சி ...

நாம் அதில் தொடர்ந்து முதலீடுகளைச் செய்வோம் இந்த பிராந்தியத்தில் மிகச்சிறந்த துறைமுகமாக மாற்றுவதே நமது திட்டம் என லியூ தெரிவித்துள்ளார். கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன்கையாளும் ஒரு பகுதியையும் சீன நிறுவனம் நிர்வகித்துவருகின்றது.

தற்போது செங்கடல் பிரச்சனை காரண மாக கொழும்புத்துறைமுகத்திற்கு வரும் கப்பல்களை அங்கு கையாள முடியவில்லை. அது தொடர்பில் ஐரோப்பிய நிறுவனங்கள் கவலைகளை தெரிவித்துள்ளன. இந்த நிலையில் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பக்கம் அவர் களின் கவனம் திரும்பியுள்ளது.

எம்.எஸ்.சி கப்பல் நிறுவனம் இந்தியாவின் அதானி குழுமத்துடன் நெருங்கிய தொடர்புள் ளது. அதானி குழுமமம் அமெரிக்காவுடன் இணைந்து கொழும்பு துறைமுகத்தின் கொள் கலன் கையாளும் பகுதியை அபிவிருத்தி செய்கின்றது. அதேசமயம், தென்னிந்தியாவின் வைசின்ஜாம் பகுதியிலும் துறைமுகம் ஒன்றை அமைக்கின்றது. அதன் வேலைகள் இந்த வரும் ஆரம்பமாகும். எனினும் தற்போது அவர்கள் சீனாவின் துறைமுகத்தை சார்ந்திருக்கவேண்டிய நிலை ஒன்று உருவாகியுள்ளது சீனாவுக்கு அனுகூலமானதாகவே பார்க்கப்படுகின்றது.

### இஸ்ரேலுடன்... தொடர்ச்சி ...

தலைநகர் டமகஸில் ஈரானிய தூதரகம் மீது இஸ்ரேல் மேற் கொண்ட தாக்குதலில் ஈரானின் ஜெனரல்கள் கொல்லப்பட்டதற்கு ஈரான் இஸ்ரேல் மீது அல்லது ஏனைய நாடுகளில் உள்ள இஸ் ரேலிய இலக்குகள் மீது தாக்குதலை நடத்தலாம் என்ற அச்சங்கள் அதிகரித்து வருகின்றன.

ஈரான் மற்றும் இஸ்ரேல் இராணுவங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. ஈரான் தனது படையினரின் விடுமுறைகளையும் இரத்து செய்துள்ளது. ஈரானின் தூதரகம் மீதான தாக்குதல் என்பது ஈரான் மீதான தாக்குதலாகவே பார்க்கப்படும் என ஈரானின் தலைவர் கடந்த புதன்கிழமை(10) தெரிவித்திருந்தார்.

ஆனால் இஸ்ரேலின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நாம் அனைவரும் உதவிகளை வழங்குவோம் என பைடன் தெரிவித்துள்ளார்.

இதனிடையே ஈரான் நேரிடையாக இஸ் ரேலை தாக்கினால் அது மிகப்பெரும் போராக அந்த பிராந்தியத்தில் உருவாகலாம் என்ற அச்சங்கள் எழுந்துள்ளன.



**ரணிலுக்காக... தொடர்ச்சி ...**

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில், அவரது கட்சி மிகவும் பலவீனமான நிலையில்தான் இருக்கிறது. அவரது நம்பிக்கைக்குரியவர்கள் "மெகா கூட்டணி" ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள். மற்றைய கட்சிகளைப் பிளவுபடுத்தி ஒரு தரப்பை தமக்கு ஆதரவாகக் கொண்டுவருவதுதான் அவரது உபாயம். பெரமுனவிலிருந்து முக்கியமான எம்.பி.க்கள் சுமார்15 பேர்ரணிலுடன்இணைவது பெரும்பாலும் உறுதியாகியிருக்கின்றது. தேர்தலுக்கான அறிவிப்பு உத்தியோகபூர்வமாக வெளியான பின்னர் அவர்கள் தமது நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவிக்கலாம்.

மறுபுறம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபட்டுள்ளது. அந்தக் கட்சியும் இப்போது நீதிமன்றத்தில் நிற்கிறது. அதில் பலம்வாய்ந்த அணியாகவுள்ள சந்திரிகா குமாரதுங்க - நிமல் சிறிபால டி சில்வா அணி ரணிலுக்கு ஆதரவளிக்கலாம் எனத் தெரிகின்றது. சஜித்துடன் உள்ள ஒரு சில அதிருப்தியாளர்கள் மே தினத்துக்குப் பின்னர் ரணிலுடன் இணையலாம் என்றும் தகவல் வெளியாகிறது.

அனைத்து பிரதான கட்சிகளுமே மே தினத்தில் தமது பலத்தைக் காட்டுவதற்குத் தயாராகிக்கொண்டிருக்கின்றன. மே தினத்தை, பேரணிகள் மூலம் தமது பலத்தைக் காட்டுவதற்குப் பயன்படுத்துவது வழமை. இந்த வருடம் முக்கியமான இரண்டு தேர்தல்களும் எதிர்கொள்ளப்படுவதால் இம்முறை மே தினம் அதிகளவுக்கு களைகட்டும் என எதிர்பார்க்கலாம். அதேவேளையில் மே தினத்துக்குப் பின்னர் முக்கியமான அரசியல் நகர்வுகளைக் காணலாம்.

• • •

**தமிழினப் படு... தொடர்ச்சி ...**

இந்த தண்டனை விலக்கீட்டுக் கலாச்சாரத்தில் நான் ஆய்வுக்குட்படுத்திய புதிய அலகான கதாநாயக தண்டனை விலக்கீட்டுத்தன்மை குறிப்பிடத்தக்கது *(Heroic impunity)*. குற்றவாளிகளை கதாநாயகர்களாக விபரித்து அந்த கதாநாயக தன்மைக்குள் குற்றங்களுக்கான விலக்கீட்டுரிமை கொடுக்கின்ற செல்நெறியை தற்போதைய இனவாத கட்டமைப்பு உருவாக்கியுள்ளது. கதாநாயகத் தன்மைக்கும், இனப்படுகொலை குற்றத்திற்குமான முடிச்சு தண்டனை விலக்கீட்டுரிமை கலாச்சாரத்தை வலுவாக்கின்றது.

இவ் வலுவாக்கல் செயன்முறையில் பாதிக்கப்பட்ட மக்களின் பொறுப்புக்கூறலிற்கான கோரிக்கை அர்த்தமற்றதாகின்றது. பொறுப்புக்கூறல் செயன்முறைக் கட்டமைப்பு வலுவிழந்த நிலையில்தான், கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை தொடர்ந்து இடம்பெறுகின்றது. இது பலஸ்தீனத்தில் 'வலிந்து குடியிருப்பதினூடு' *(settler colonialism)* தொடர்ந்து நடக்கின்றது. வடக்கு-கிழக்கில் சிங்கள-பௌத்த மயமாக்கலூடாகவும், இராணுவமயப்படுத்தலுக்கூடாகவும் இது தொடந்து அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

பலஸ்தீனத்திலும், வடக்கு-கிழக்கிலும், விடுதலைக்கும், நிலமீட்புக்குமான தொடர்பு துண்டிக்கப்பட முடியாதது. தமிழின விடுதலையும், பலஸ்தீன மக்களின் விடுதலையும், நிலமீட்பும் உதிரியான இயங்குதள வெளி அல்ல. ஒரு தேசத்தின் கூட்டிருப்பு என்பது நிலத்தில் தங்கியுள்ளது. நிலமின்றி தேசத்திற்கான கோரிக்கை செல்லுபடியற்றதாகின்றது. தேசத்திற்கான கோரிக்கையை நிராகரிப்பதற்கு, நிலக் கூட்டுரிமை கோரிக்கையை இல்லாது செய்தல், உத்தி சார்ந்து அவசியமாகின்றது.

**தொடரும்.....**

**ஹிஸ்பொல்லா... தொடர்ச்சி ...**

உயர்ந்த ரக ஆயுதப் பலத்தின் ஒரு வீதத்தைத் தான் தற்போது பயன்படுத்தியிருக்கிறது. எதிர்ப்பு தரப்பினரால் உருவாக்கப்பட்ட மரபு ரீதியிலான ஆயுதங்களைத் தான் இதுவரை அவர்கள் பயன்படுத்திவருகிறார்கள் என்று லெபனான் நாடாளுமன்ற உறுப்பினரான ஹஸான் எஸடீன் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இது வரை அனைத்தும் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. இதற்கும் அப்பால் சென்றால், போர் விரிவடைந்து பூகோளப் பரிமாணத்தை எட்டும் சாத்தியக்கூறு இருக்கிறது என்பது சுட்டிக்காட்டப்படவேண்டும்.

தொடரும்

**நன்றி: அல்ஜஸீரா**

**தென்கொரிய... தொடர்ச்சி ...**

மக்கள் சக்தி கட்சியின் தலைவரான தற்போதைய பிரதமர் ஹங் டொங் கூன் பதவி விலகியுள்ளார். எதிர்க்கட்சிகளின் கூட்டணியின் வெற்றி என்பது அவர்கள் நாடாளுமன்றத்தில் புதிய சட்டங்களை கொண்டுவரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த வெற்றி மக்களுக்கு கிடைத்த வெற்றி என ஜனநாயகக் கட்சியின் தலைவர் லீ ஜேன் மயூங் தெரிவித்துள்ளார். தற்போது நாட்டில் உள்ள பொருளாதார நெருக்கடிகளை தீர்ப்பது தான் எமது முதலாவது குறிக்கோள். குடந்த 2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற அரச தலைவருக்கான தேர்தலில் குறுகிய வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்திருந்தோம். ஆனால் எதிர்வரும் தேர்தலில் வெற்றிபெறுவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**பிளவை நோக்கி... தொடர்ச்சி ...**

கொடுக்கும் போது தமிழ்த் தலைமை பலமாக இருந்தது. அவ்வாறான ஒன்றை சம்பந்தன் செய்வதற்குத் தவறிவிட்டார்.

பலரும் விரும்புகிறார்களோ இல்லையோ, தமிழரசுக் கட்சி தமிழர்களுக்குத் தேவையான ஒரு முதன்மையான கட்சி. ஆனால், இன்று பலர் ஒதுங்கிவிட்டார்கள். இலங்கை அரசியலில் செல்வந்தர்கள், கல்விமான்கள் வாக்களிப்புக்குச் செல்வதில்லை. அதேபோல அரசியலுக்கு வருவதற்குப் பலர் பின்னடிக்கின்றார்கள். ஏனெனில் அரசியல் சிக்கலான ஒன்றாக இருக் கின்றது. அந்தவகையில் பலர் வெளியில் இருக்கின்றார்கள்.

தமிழரசுக் கட்சியில் ஜனநாயகம் என்று கதைத்தாலும், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் வாக்களிப்பின் மூலமாகத் தெரிவு செய்யப்படுவதில்லை. சஜித் பிரேமதாச, ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இடையில் போட்டி வந்த போது தேர்தல் நடைபெறவில்லை. அண்மையில் இந்திய காங்கிரஸ் கட்சியில் சசி தரூர் தலைமைப் பதவிக்காக தேர்தலில் கேட்க விரும்பினார். ஆனால், கார்க்கேயைத்தான் காந்தி குடும்பம் தலைமைப் பதவிக்குக் கொண்டு வந்தது. சசி தரூர் இளமையானவர் தமக்கு சவாலாக அமையலாம் என அவர்கள் கருதினார்கள். இருவருக்கும் இடையில் தேர்தல் நடைபெற்றிருந்தால் சில சமயம் சசி தரூர் வெற்றி பெற்றிருக்கக்கூடும்.

அரசியல் கட்சிகள் ஜனநாயகம் குறித்து பேசிக்கொண்டாலும் இவ்வாறு தேர்தல் நடத்தப்படுவதில்லை. ஏனெனில் தோல்வியடைந்த பிரிவினர் எப்போதும் பிரச்சினையாக இருப்பார்கள். அதனால்தான் ஏகமனதான தெரிவுக்கு அனைத்துக் கட்சிகளுமே முயற்சிக்கின்றன. அதனால், தமிழரசுக் கட்சியில் இடம்பெற்ற தேர்தல் ஜனாநாயக தன்மையானது என சிலர் கூறுவதற்கு முற்பட்டாலும், அந்தத் தலைமை தெரிவு செய்யப்பட்ட பின்னர் கட்சி பிளவுபடுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனைத் தவிர்ப்பதற்காகத்தான் ஏகமனதான தெரிவை நோக்கி கட்சிகள் செல்கின்றன.

இப்போது பொது வேட்பாளர் விடயத்தை எடுத்துக்கொண்டாலும், இந்த இரண்டு அணியினரும் மாறுபட்ட நிலைப்பாட்டை எடுக்கக் கூடும். ஒரு சிக்கலான நிலைமையில் தமிழினம் இருக்கின்றது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது.

• • •

**மக்கள் வளங் ... தொடர்ச்சி ...**

அதிகாரிகளால் தடியடிகளை தவறாகப் பயன் படுத்தியமையை வீடியோ ஆதாரத்துடன் வெளிப்படுத்துகிறது.

அதிகாரிகள் சர்வதேச சட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் மோசமான வகையில் நடந்துக் கொண்டுள்ளனர். அமைதியான முறையில் போராட்டம் நடத்துவதற்கு மக்களுக்கு உரிமை உண்டு என்பதையும், போராட்டங்களை எளிதாக்குவதும் பாதுகாப்பதும் அதிகாரிகளின் கடமை என்பதையும் சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் அங்கீகரிக்கத் தவறி விட்டனர்.

"அமைதியான எதிர்ப்பாளர்களைக் குறிவைத்து, துரத்தினார்கள், அடித்தார்கள்" என்று அம்னஸ்டி இன்டர்நேஷனலின் தெற்காசியாவிற்கான பிராந்திய இயக்குநர் ஸ்மிருதி சிங் கூறினார்.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில், இலங்கையர்கள் எதிர்கொண்ட நீண்டகால பொரு ளாதார நெருக்கடிக்கு எதிரான போராட்டங்கள், ஊழல் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான போராட்டங்கள் மற்றும் கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட "அரகலயா" என அழைக்கப்படும் போராட்டங்களின் போது சட்டத்தை பாதுகாப்பு தரப்பினர் பயன்படுத்திய விதம் சட்டவிரோதமானது என சர்வதேச மன்னிப்புச் சபை கூறுகிறது.

2022, 2023, 2024 ஆம் ஆண்டுகள் உட்பட இன்றுவரை தொடரும் பெரும்பாலும் அமைதியான போராட்டங்களுக்கு எதிராக சட்டத்திற்குப் புறம்பான சக்தியைப் பயன் படுத்துவதை சர்வதேச மன்னிப்புச் சபை ஆவணப்படுத்தியுள்ளது.

இதற்கிடையில், நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், 2017 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் அமைதியான போராட்டங்களுக்கு பாதுகாப்பு படையினரும், புலனாய்வு அமைப்புகளும் கண்காணிப்பு, அச்சுறுத்தல், துன்புறுத்தல் மற்றும் இடையூறுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர்.

சர்வதேச மன்னிப்புச் சபை தனது விசாரணையின் போது, கொழும்பு, பத்தர -முல்லை, களனி, யாழ்ப்பாணம் மற்றும் காலி ஆகிய இடங்களில் இருந்து 30 போராட்டங்களின் சமூக ஊடகங்களில் சேகரிக்கப்பட்ட 95 சரிபார்க்கப்பட்ட வீடியோக்களில் 39 தரமான நேர்காணல்களையும் விசாரணை அறிக்கையில் உள்வாங்கியுள்ளது.

• • •

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.